

பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

பொருளடக்கம்

மலர் 3 இதழ் 10

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1980
ஆனித் திங்கள் 12-ம் நாள்
விலை அணா 5
25—6—49

வகுப்பு வாதிகள்

ஆரியர் வகுப்பு வாதிகளா?
அன்றித் திராவிடர் நாங்களா?

சீரான ஆட்சி செலுத்த நினைப்பவர்
ஆராய்ந்து பார்க்க வேண்டுமே ஐயா!

(ஆரியர்......

பார்ப்பனர் தவிர மற்றவர் அன்று
படிக்கக் கூடாதெனக் கூறினர் —மீறிப்
படித்தவர் வாயில் ஈயத்தைக் காய்ச்சிப்
பாய்ச்சு வோமென உறுமினர்

(ஆரியர்

நாட்டினில் கல்வி வாசனை யின்றி
நலிவுற்றுக் கிடந்திடும் ஏழையர் —துயர்
ஓட்டிட மக்களில் ஒவ்வோரினமும்
உரிமை கொள்வதை மறுத்திடும்

(ஆரியர்

தொடக்கக் கல்வியும் இன்றிப் பற்பலர்
தொல்லை யுற்றிடும் வேளையில் —அவர்
கிடக்கட்டும் எங்கள் கேள்விக்குப் பதிலெனக்
கேட்டுக் கிளர்ந்திடும் பாதகர்

(ஆரியர்

—அம்மான்



நீதியல்ல

சென்னை அரசினர் போக்கு புரிந்துகொள்ள முடியாத விசித்திரமாகி வருகிறது. அவர்களுடைய திட்டம் என்ன? மேற்கொள்ளும் நடைமுறையாது? பின்பற்றும் கொள்கை எது? இவற்றை நம்மால் கண்டு கொள்ள இயலாமலிருக்கிறது.

அண்மையில் "விடுதலை" "திராவிடநாடு" இதழ்கள் மீது அவர்கள் ஏவியிருக்கும் ஜாமீன் பாணங்களைப் பார்த்த பிறகோ, சென்னை அமைச்சர் குழுவின் போக்கு விடைகாண முடியாத புதிராக நமக்குக் காட்சியளிக்கிறது. "விடுதலை"க்குச் சென்ற ஆண்டில் கேட்டிருந்த ரூ 2000 இப்போது பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. ரூ. 10,000 புது ஜாமீன் கேட்டிருக்கிறார்கள். "திராவிடநாடு" இதழுக்கு ரூ. 3000 ஜாமீன் கட்டும்படி பணித்திருக்கிறார்கள்.

திராவிடர்களின் இருமணிகளென விளங்கும் இதழ்கள் "விடுதலை"யும் "திராவிடநாடும்." அரசினரின் அடக்கு முறைப் பாய்ச்சல் இந்த இரு ஏடுகளின்பால் சென்றதில் வியப்பில்லையெனினும், அத்தகைய பாய்ச்சலுக்கு அவை ஆட்பட என்ன காரணம் இருக்க முடியும் என்றே அனைவரும் கேட்பர். சுருக்கமாகச் சென்னை அரசினரின் விடை வருகிறது, "வகுப்புத்துவேசத்தை" வளர்க்கின்றன இந்த ஏடுகள் என்று.

இக் குற்றச்சாட்டு பொருந்துமா என்று நாம் பார்ப்பதற்கு முன்பு, இத்தகைய குற்றச்சாட்டுகளுக் குரியவர்கள் "விடுதலை" "திராவிடநாடு" இதழ்களை நடத்துவோர் மட்டும்தானா என்று நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். சென்னை அரசினரின் 'கெஜட்' என்று கூறத் தகும் "தினசரி" கூறுவதற்கேற்ப "விடுதலை" விஷயத்தில்

எந்த வகுப்புவாத உணர்ச்சி குற்றமாகக் கருதப்படுகிறதோ, அதே குற்றத்தைப் பிற பத்திரிகைகளும் செய்திருக்கின்றன. பிரபல பத்திரிகைகள் எனப்படுபவை, காங்கிரஸ் சர்க்கார் நிலைக்கு ஆக்கமாயிருப்பவை எல்லாமே இவ் வகுப்புவாதச் சுழலில் சிக்கியிருக்கின்றன என்பதற்கு நம்மால் ஆதாரம் காட்ட முடியும். பத்திரிகைகள் இழைக்கும் குற்றத்தை நீக்கி விடுங்கள். சென்னை சர்க்கார் மேற்கொண்டுள்ள கொள்கைதான் என்ன? "வகுப்புத்துவேஷத்தை" அடிப்படையாகக் கொண்டு தானே மந்திரி சபைகூட அமைக்கப்பட்டிருக்கிறது! மேலும் அவர்கள் உத்தியோகங்கட்கும் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கும் வகுத்துள்ள "வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உத்தரவு" வகுப்புவாதத்தின்பாற் படவில்லையா? சில அமைச்சர்களின் மேல் சாட்டப்பட்டுள்ள குற்றங்களில் இவ் "வகுப்புத்துவேஷ" குற்றமும் உண்டு என்று சென்னைக்கு "விசாரணை" நடத்த வந்த தேவ் அண்மையில் அறிவித்திருப்பதை நாம் மறந்து விட முடியுமா?

இவ்வாறு சென்னை அரசினர் குழுவே "வகுப்புவாதிகளாக" விளங்கும்போது, சென்னை அரசினர் குழுவைத் தாங்கி நிற்கும் சென்னை சட்டசபைக் காங்கிரஸ்கட்சி வீரர்களே "வகுப்புவாதி" களாக விளங்கும்போது, ஓமாந்தூரார் தம் கிராமத்துக்குச் சென்ற பின்னரும், புதிய மந்திரி சபையில் பார்ப்பனருக்கு இடமில்லையென்ற நிலைகண்டு கொதித்தெழுந்து தலையங்கங்கள் தீட்டிய மவுண்ட் ரோட் பத்திரிகைகள் "வகுப்புவாதிகளாக" விளங்கும்போது, அதே "குற்றத்தை"ச் செய்கின்ற காரணத்திற்காக "விடுதலை"க்கும் "திராவிடநாட்டு"க்கும் மட்டும் "கட்டு ஜாமீன்" என்று கேட்பது எப்படி நியாயமாகும்?

வகுப்புவாதம் குற்றமா அல்லவா என்பது ஒரு புறமிருக்க, வகுப்புவாதம் பேசுவோர், அதனைச் செயற்படுத்துவோர் ஆள்வோராயிருந்து கொண்டே, வகுப்புவாதப்போக்கில் எழுதியதால், "விடுதலை"யையும் "திராவிடநாட்டை"யும் அடக்குமுறைக்கு ஆளாக்குவதென்றால், இப்போக்கு நமக்குப் புரியவில்லையென்று நாம் கூறியதில் தவறென்ன இருக்க முடியும்? வாதியும் பிரதிவாதியும் ஒரே குற்றம் செய்கிறார்கள். ஆனால் பிரதிவாதி தண்டிக்கப்படுகிறான். வாதி தண்டிக்கும் பொறுப்பை ஏற்றுக்

கொள்கிறான். இத்தகைய விசித்திரம் தான் சென்னை அரசினரின் ஜாமீன் உத்தரவில் நமக்குத் தட்டுப் படுகிறது!

காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சி; ஆள்வோர் மிகக் கவனிப்பாயிருக்க வேண்டும்; காங்கிரஸ் தன் கவனக்குறைவால் தன் செல்வாக்கையே படிப்படியாக இழந்து வருவதை நாம் காண்கிறோம். அதற்கு மாறாக எதிர்க்கட்சிகள் பலம் பெற்று வருகின்றன; மக்களிடையே செல்வாக்குப் பெற்றுவருகின்றன. தென்னாட்டில் பெரியார் இராமசாமி வளர்த்து வரும் திராவிடக் கழகம் மக்கள் முன்னணியாக ஈடும் எடுப்புமின்றி வளர்ந்து வருகிறது. இக் கட்சிக்குக் கிடைத்துள்ள ஏடுகள் மிகச் சில. அவற்றுள்ளே "விடுதலை"யும் "திராவிடநாடு"ம் முதன்மை பெற்றிலங்குபவை. கழகத்தின் செல்வாக்கு ஒவ்வொரு நாளும் வளர்வதற்கு உறுதுணையாயிருப்பவை அவை. இந்த ஏடுகளில் வரும் எழுத்துக்கள் மக்கள் மன்றத்திலே பெற்றுள்ள செல்வாக்கை விவரிப்பது அரிது. சர்க்காரின் அடக்குமுறை வேகமே இதனை நன்கு தெளிவுபடுத்தும். வளர்ந்து வரும் கழகத்திற்கு வளர்ச்சிதரும் ஏடுகளாக அவை விளங்குவதோடு, மிகப்பழையவை, எழுபது ஆண்டு எண்பது ஆண்டு வாழ்நாள் பெற்றவை, அரசியல் செல்வாக்கும், அசைக்கமுடியாத பொருளாதார பலமும் வாய்ந்தவை என்று கருதப்படும் ஏடுகளுக்கு நாட்டிலேயுள்ள செல்வாக்கு குறையுமளவுக்கு, அவை மக்களிடத்திலே செல்வாக்குப் பெற்றும் வருகின்றன. இது பொறாமையை எழுப்புவது இயற்கை. இப்பொறாமை சென்னை அரசினருக்குப் பத்திரிகை ஆலோசனைக் குழுவின் மூலம் ஆலோசனையாகத் தரப்பட்டு, ஜாமீன் வடிவிலே அடக்குமுறை எழுந்திருக்கிறது. மேலும், கரையும் காங்கிரஸை நிலை நிறுத்த எண்ணும் காமராஜர்களுக்குப் பெரும் தடையாக விளங்குகின்றன "விடுதலை" "திராவிடநாடு" இதழ்கள் என்றும் அவர்கள் எண்ணிக்கொள்கிறார்கள். அத்தகைய எண்ணத்தின் விளைவே இந்த அடக்குமுறை பாணம்!

நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது, சர்க்காரின் இப் போக்கு! ஆட்சியினரின் பலம் காங்கிரஸ் கட்சிக்கு இருக்கிறது. இன்று இந்திய உபகண்டத்தையே ஆளும் வாய்ப்பு காங்கிரஸுக்குக் கிட்டியிருக்கிறது. இப்பலம் போதாதென்றால் நாட்டிலுள்ள எண்ணற்ற காங்கிரஸ் ஏடுகளின் "எழுத்துமட்டும்" கூடப்போதும்! "விடுதலை" "திராவிட

நாடு" தரும் கருத்துக்களுக்கு மறுப்புத்தர, அவற்றின் வாதங்களுக்கு ஆணித்தரமான வகையில் எதிர்வாதம் செய்ய, சென்னை மாகாணத்தில் மட்டுமே அவர்கட்குப் பத்து நாளிதழ்கட்கு மேலிருக்கின்றன. வார இதழ்களுக்கோ கணக்கு வழக்கில்லை. இத்தகைய பெரிய வசதியிருந்தும், ஏன் 'ஜாமீன் கெடுபிடி'யில் சென்னை ஆட்சியினர் முனைய வேண்டுமென்று தான் நமக்குப் புரியவில்லை. "விடுதலை" "திராவிடநாடு" இதழ்களின் கருத்து அவர்கள் எண்ணப்படி, மறுப்புக்கூறமுடியாதது என்று அவர்கள் கருதுகிறார்களா? அவர்களின் அடக்கு முறைப்போக்கு அதைத்தான் காட்டுகிறது. எதிர்த்து வாதம் செய்ய முடியாத போதுதான் கோபமும் அடிதடியும் கிளம்பும். கருத்துக்குக் கருத்து, வாதத்திற்கு எதிர்வாதம், மேற்கோளுக்கு மேற்கோள், ஆதாரத்திற்கு ஆதாரம் காட்ட முடியாதபோதுதான், உடல் வலிமையையும் குறுக்கு வழியையும் கையாள முயல்வர். சென்னை அரசினரின் போக்கும் அப்படித்தான் இருக்கிறது!

ஆனால் திராவிடக் கழகத்தினருக்கு இப்போக்கு எதிர்பாராததல்ல; இன்னும் "கொடுமைகளை" அவர்கள் வரவேற்கத் தயாராகவே இருக்கின்றனர்; உரிமைக்கு உரிய விலை கொடுக்க அவர்கள் தயங்கவேமாட்டார்கள். "திராவிடநாடு" ஜாமீன் கோரிக்கையை வெளியிட்டு நன்கொடை வேண்டுமென வேண்டுகோள் விடுத்தது. ஒரு வாரத்திற்குள் மூவாயிரம் தந்துவிட்டனர் ஆதரவாளர்கள். "விடுதலை" வேண்டுகோள் பயன் தந்து வருகிறது; நாட்டுமக்கள் 'விடுதலை'யின் பயனை நன்குணர்ந்திருப்பவர்கள்; எனவே அதற்கு "இடுக்கண்" வந்துள்ளபோது கைகட்டி வாய்பொத்தியிருக்கமாட்டார்கள் என்பது திண்ணம். ஆட்சியாளர் அறைகூவலுக்குப் பதிலளிக்கும் முறையில் நன்கொடைகள் பல்லாயிரக்கணக்கில் குவியுமென்பது மட்டும் உறுதி! அப்பொழுதேனும் அரசினர் தங்கள் தவறுதலை உணர்வார்களா, என்று பார்ப்போம்.

காலமும் கருத்தும்

கல்கத்தாத் தேர்தல்


கல்கத்தாவில் நடைபெற்ற சட்டசபை இடைத் தேர்தலில் சரத் சந்திரபோஸ் அடைந்த வெற்றி ஆளும் கட்சியினருக்கு அரியதொரு பாடத்தைத் கற்பிப்பதாயிருக்கிறது. காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்ட அபேட்சகர் இந்திய முதல்வர்-நேரு, படேல் ஆதரவு கோரியிருந்தும், படு தோல்வி அடைந்திருக்கிறார். இந்தியா முற்றுமே அத்தேர்தல் முடிவில் கவனம் செலுத்திற்று. 'மேலிடம்' வழக்கத்திற்கு மாறாக மிகுந்த அக்கறை காட்டிற்று. "நேத்தாஜியின் சகோதரர் காங்கிரஸை எதிர்த்து வெல்வதா? அதை நாம் பார்த்திருப்பதா?" என்று முரசு கொட்டினர், ஆளும் பெரியவர்கள். ஆனால் தென் கல்கத்தா மக்கள் காங்கிரஸுக்கு எதிர்ப்பாகத் தங்கள் தீர்ப்பை வழங்கினர். நாட்டில் காங்கிரஸுக்குச் செல்வாக்குக் குறைகிறது என்பதையே கல்கத்தா காட்டுகிறது. காங்கிரஸ் ஆட்சி மக்களுக்குப்பிடிக்கவில்லை யென்பதையே கல்கத்தா தெளிவுறுத்துகிறது. காங்கிரஸின் போக்கு அழிவை நோக்கி இட்டுச் செல்லுகிறது என்பதையே கல்கத்தா எடுத்தியம்புகிறது. இம் மாறுதலைக் கண்ணுள்ளோர் காணலாம், இதயமுள்ளோர் உணரலாம். சென்னைக் காங்கிரஸ்வாதிகள் ஜில்லா போர்டு தேர்தலுக்கு ஆயத்தமாகுமுன் கல்கத்தாத் தேர்தலை நினைவில் வைத்துக் கொள்வது நல்லது.

விளம்பர வரி

பத்திரிகைகட்கு விளம்பரவரி விதிப்பதுபற்றிய செய்திகள் இப்போது நிறைய வருகின்றன. சினிமாவுக்கு வரிவிதித்தால் சினிமா நடத்துவோர் எதிர்க்கிறார்கள்; மோட்டாருக்கு வரிவிதித்தால் மோட்டார் உரிமையாளர்கள் போர்முரசு கொட்டுகிறார்கள்; ஹோட்டல் விற்பனையின்மீது வரி என்றால் ஹோட்டல் முதலாளிகள் கதவை இழுத்துச் சாத்துவோம் என்று பயமுறுத்துகிறார்கள். அதைப் போன்றே பத்திரிகை விளம்பரத்தின்மீதுவரி என்றவுடன் பத்திரிகைக்காரர்கள் ஆத்திரப்



படுகிறார்கள்; மக்களின் நன்மைக்காகப் பேனாவை ஒட்டிய மன்னர்கள் தங்கள் சொந்த நன்மைக்காகக் காரசாரமான தலையங்கங்கள் தீட்டுகிறார்கள். இது இயற்கை தான்! பத்திரிகைகளுக்கு விளம்பரம்தான் "காமதேனு"வாக இருந்து வருகிறது. அந்தக் "காமதேனு"வின அருள் எல்லாப் பத்திரிகைகட்கும் எளிதில் கிடைத்துவிடுவதில்லை. ஒரு சிலர் ஏகபோகமாக அந்தக் 'காமதேனு'வை அனுபவித்து வருகிறார்கள். சர்க்காரின் கண்ணில் இக் காமதேனு இப்போதுதான் தட்டுப்பட்டிருக்கிறது. வரி விதிக்க முற்பட்டிருக்கிறார்கள். இன்னும் வரி அமுலுக்கு வரவில்லை. அதற்குள் பத்திரிகை முதலாளிகள்பண்ணும் ஆமர்க்களம் கொஞ்சநஞ்சமல்ல; "விளம்பரத்திற்கு வரியா? போடுபார்ப்போம். உங்கட்கு இதுவரை தந்த 'விளம்பரத்தை' நாங்கள் இனிக் கொடுக்கமாட்டோம்" என்று சவால் விட்டிருக்கிறார்கள். ஆனால் முதல்வர் குமாரசாமி ராஜாவும் இளைத்தவராகத் தோன்றவில்லை; பதிலுக்குப் பதில் வார்த்தைக்கு வார்த்தை சுடச் சுடப் பேசியிருக்கிறார்கள். இந்தப் போர் எப்படி முடியுமென்று தோன்றவில்லை; பொறுத்திருந்து பார்ப்போம்.



வம்பு மடம்

— ஆண்டி —

காங்கிரஸின் பொதுக் காரியதரிசி தோழர் தேவ் சென்னைக்கு வந்து ஒரு வாரம் தங்கியிருந்தார்; சென்னை மாகாணத்தில் காங்கிரஸை எப்படி வளர்ப்பது என்று திட்டமிடவோ, அல்லது காங்கிரஸின் நிலையறியவோ அவர் வரவில்லை. அமைச்சர்களாக இருக்கும் சிலர்மீது சில புகார்களைத் தாக்கல் செய்திருக்கின்றனர், பிரகாசம் தரப்பினர். நெடுநாளையத் தகவல் இது! ஓமாந்தூரார் பதவியைவிட்டு விலகிப் புது மந்திரி சபை அமைக்கப்பட்டபோது பிரகாசம் தரப்பினருக்கும் அதாவது டாக்டர் சுப்பராயன் முதலியோருக்கும் ஏதாவது 'இடம்' கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. தகுதி, திறமை பார்த்து மந்திரிகளைப் பொறுக்குவார்களென்று நம்பப்பட்டது. ஆனால் ஓமாந்தூரார் காட்டிய வழியில் கனம் குமாரசாமி ராஜா செல்வதென்று தீர்மானித்துவிட்டபடியால் அந் நம்பிக்கையில் மண் விழுந்தது. எதிர்பார்த்து ஏமாந்த பிரகாசம் தரப்பினருக்குக் கோபம் கோபமாக வந்தது. "சரி-அப்படியா சங்கதி" என்று மனத்திற்குள் எண்ணிக்கொண்டு பழைய புகார்களைக் கிளற ஆரம்பித்தனர், அவர்கள். "லஞ்சம் வாங்கினவர்கள் மந்திரிகளாயிருப்பதா? சொந்தக்காரர்களுக்குப் பணம் கடனாகக் கொடுத்தோர் அமைச்சர்களாயிருப்பதா? வகுப்புவாதிகள் மந்திரிகளாயிருப்பதா?" என்று ஆந்திரகேசரி ஆர்ப்பரித்தார். "புகார்களை உடனே விசாரிக்கவேண்டும்" என்று மேலிடத்திற்கு விண்ணப்பத்திற்குமேல் விண்ணப்பம் போட்டார்; அவர் தரப்பை ஆதரிக்கும் "தகுதி, திறமை"ப் பத்திரிகைகளும் "விசாரணை" வேண்டுமென்று திட்டின. மேலிடம் விசாரணை செய்யத் தோழர் சங்கரராவ் தேவை அனுப்பிவைத்தது. அவர் சென்னைக்கு வந்தார்; குற்றம் சாட்டப்பட்டோரை விசாரித்தார்; முன்னாள் அமைச்சர் ஓமாந்தூராரைக் கண்டு பேசினார்; குற்றம் சாட்டியவர்கள் குற்றத்தை நிரூபிக்க முன் வரவில்லையென்றாலும் தம் வேலை முடிந்துவிட்டதென்று புறப்பட்டுப்

போய்விட்டார்; அவர் தன்னுடைய கருத்தைக் காங்கிரஸ் காரியக் கமிட்டிக்குச் சமர்ப்பிப்பாராம்.

இவ் விசாரணை நாடகத்திற்கு "அதிசப்படியான" விளம்பரம் தந்தன சென்னைப் பத்திரிகைகள்; தேவ் விரும்பாத அளவுக்கு இச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்தன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! சென்னையில் பொதுக் கூட்டத்தில் பேசிய தேவ் "காங்கிரஸுக்குள் ஏற்படும் தகராறுகளைக் காங்கிரஸுக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள வேண்டும். வெளிப்படையாகக் காங்கிரஸ்காரர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசவோ எழுதவோ கூடாதெ"ன்று குறிப்பிட்டிருக்கிறார். ஒரு காங்கிரஸ் தொண்டர் அவரைக் கேட்டாராம் "நீங்கள் இச்சமயத்தில் காங்கிரஸ் பொதுக் காரியதரிசியாயிருப்பதற்கு வருந்த வில்லையா?" என்று. தேவ் "ஆம்" என்று சொன்னதோடு, "நீங்கள் மகிழ்ச்சியடைகிறீர்களா?" என்றாராம். "இல்லை" என்றாராம் அத்தொண்டர். "அப்படி என்றால் இருவரும் ஒருவரை யொருவர் கட்டி அழுது தேற்றிக் கொள்வோம்"



என்றாராம் தோழர் தேவ். எப்படி வேடிக்கை பார்த்தீர்களா? காங்கிரஸிலுள்ள தகராறுகள் அவ்வளவு தொலைமிஞ்சிவிட்டன. பிரகாசம் தரப்பினருக்கும் காமராஜ் தரப்பினருக்கும் தகராறு என்றால் அவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் கட்டியழுவதைத்தவிர வேறு வழியில்லை என்று ஜாடையாகத் தோழர் தேவ் குறிப்பிட்டிருக்கிறார் என்பதைத்தவிர நாம் வேறு என்ன கூறமுடியும்?

தேவ் சிறிது நெஞ்சுரம் படைத்தவர்தான் போலும்! மேலும் ஒரு பிரச்சனையில் அவர் கவனம் சென்றிருக்கிறது. "பள்ளிக்கூடங்களில் பார்ப்பனப் பிள்ளைகளுக்கு இடமே கிடைப்பதில்லை" என்பதாகப் புகார் இருக்கிறதல்லவா? பொல்லாத மந்திரிகள் பார்ப்பனர்கள் படிக்கமுடியாதபடி கதவைச் சாத்திவைக்கிறார்களல்லவா? இச்செய்தியும் அவர் காதுக்கு எட்டியிருக்கிறது. "லட்சாதிலட்சம் நாட்டு மக்கள் ஆரம்பக் கல்விகூடப்பெற வசதியில்லாது தவிக்கும் நேரத்தில் அதை மனதிற் போட்டுக்கொள்ளாமல், தங்கள் சொந்தப் பிள்ளைகட்குக் கல்லூரிகளில் இடங் கிடைக்கவில்லையே; சர்க்கார் காரியாலயத்தில் வேலை கிடைக்கவில்லையே என்று புகார் கூறிக்கொண்டு திரிகின்றனர் சில சுயநலக்காரர்கள்" என்று பொதுக்கூட்டப் பேச்சில் வெளுத்துக் கட்டியிருக்கிறார் தோழர் தேவ். பாருங்களேன்! சென்னை மண்ணில் மிதித்தவுடனேயே அவருக்கும் வகுப்புவாதம் பிடித்துக் கொள்கிறது!

இவ் வகுப்புவாதத்தைத் தீர்த்துக்கட்டி விடுவதென்று தோழர் தென்னெட்டி விசுவநாதம் எவ்வளவோதான் முயற்சி செய்கிறார். அவர் சென்னை சட்டசபைக்கு ஒரு தீர்மானம் கொண்டு வருவதாக இருந்தார். ஆனால் காங்கிரஸ் பெயரைச் சொல்லிக் கொண்டு சென்னை சட்டசபை உறுப்பினர்களாகி விட்ட வகுப்புவாதிகள் அனுமதித்தால் தானே! தோழர் விசுவநாதம் அத்தீர்மானத்தைக் கொண்டுவரக் கூடாதெனச் சென்னை சட்டசபைக் காங்கிரஸ் நிர்வாகக்கமிட்டி தீர்ப்பளித்து விட்டது!

பாகிஸ்தான் முதல்வர் லியாகத் அலிகான் மாஸ்கோ செல்ல விருக்கிறார்; அமெரிக்கா பண்டிதர் நேருவை அழைத்தால், ரஷ்யா லியாக்கத் அலிகானை அழைத்து வைக்கிறது இந்தியா தம் முதல்வர் நேருவை ட்ரூமன் அழைத்திருப்பதறியப் பூரிப்படைகிறது. பாகிஸ்தான் தம் முதல்வரை ஸ்டாலின் அழைத்திருப்பதையறிய பெருமை கொள்கிறது. இப்படியாக இருநாடுகளும் ரஷ்யா, அமெரிக்கா ஆதிக்கப் போட்டியில் விளையாட்டுப் பொருள்களாக மாறிவிட்டது விந்தைதான்!

டாக்டர் மணவாள ராமாநுஜம்

பேட்டிக் கட்டுரை:
மு. அண்ணாமலை

சாதாரண விரிவுரையாளராக இருந்து சென்னை மாநிலக் கல்லூரியில் உயிர் நூற்கலையின் பேராசிரியராக உயர்ந்து, பின்னர் அதே கல்லூரியின் தலைவராக ஆகிய இவரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பதவி தேடிவந்து கூடியது. திருவாளர் மணவாள ராமாநுசம் அவர்களைப் 'பொன்னி'யின் சார்பாகப் பேட்டி காணச் சென்றோம்.



ஏழு எட்டு மாதங்களுக்கு முன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் நியமனம் பற்றி எங்கும் பேச்சாக இருந்தது. C. V. ராமன் வருவார் அவர் வருவார் இவர் வருவார் என்று பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன. கடைசியில் டாக்டர் மணவாள ராமாநுசம் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிறார்கள் என்று தெரிய வந்தது. 'சென்னை மாநிலக் கல்லூரியின் தலைவராக இருந்தவர்' என்ற அறிமுகத்தைத்தான் மாணவருலகம் பேசிக்கொண்டிருந்தது.

ஃ

ரயில்வே ஸ்டேஷனிலிருந்து அண்ணாமலைநகர் செல்லும் வழியில் அருமையான பங்களா. நல்ல பூஞ்சோலை. வசிப்பதற்கு ஏற்ற இடம். அங்கேதான் துணைவேந்தர் வசிக்கிறார். வாசலில் எப்பொழுதும் கிளம்பத் தயாராக இருக்கும் ஒரு சிவப்புக்கார் நின்று கொண்டிருக்கும். பார்வையாளர் சீட்டை அனுப்பி வைத்தோம். அரைமணி நேரம் காத்திருந்த அழைப்பைப் பெற்றோம். வழுக்கை விழுந்த தலை–கண்ணாடி அணிந்த முகம்–குறுகுறுப்பான பார்வை–யோசனையில் ஆழ்ந்த தோற்றம். இப்படிக் காட்சியளிக்கும் சாதாரண மனிதர் எங்களை வரவேற்று இருக்கை தந்தார். அவர்தான் டாக்டர் ராமாநுசம்.

"பத்திரிகைக்கு நீங்கள் என்னிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?" என்று கேட்டார், "ஒருசிறு பேட்டி ......தற்காலக் கல்வி நிலை பற்றிச் சில கேள்விகள்......" என்றோம். "ஆகா கேளுங்கள்" என்று சிரித்துக்கொண்டார் துணைவேந்தர்.

நான்: இந்தியாவில் ஆங்கிலத்தின் எதிர்கால நிலை எப்படியிருக்கும்?

டாக்டர்: இப்பொழுது இருப்பது போலவே இன்னும் இருபது ஆண்டுகளுக்கு இருக்கும். ஆங்கிலத்தின் தேவையை மற்ற எந்த இந்திய மொழியைப் பொது மொழியாக வைப்பதனாலும் சாதித்துக் கொள்ளமுடியாது.

நான்: பல்கலைப் பாடங்கள் தாய் மொழியில் போதிக்கப்படுவதைப் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

டாக்டர்: போதிக்கலாம். ஆனால் அதில் தற்காலிகமான குறைபாடுகள் இருக்கின்றன. தாய் மொழியில் பாடங்களைப் படிக்கும் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். எல்லாக் கல்லூரிகளிலும், ஒரே சமயத்தில் தாய் மொழியில் அமைத்திருக்க வேண்டும். இங்கே தமிழில் இடை நிலை (Inter) வகுப்புப் படித்துவிட்டுச் செல்லும் மாணவனை வேறொரு கல்லூரியில் ஆனர்ஸ் வகுப்புக்கு எடுக்காமல் விட்டுவிடுவார்கள். ஆனர்ஸ் வகுப்புப் பாடங்களை ஆங்கிலத்தில்தான் படிக்க வேண்டியிருக்கிறது. முதலில் ஆங்கிலத்தில் படித்துவரும் பையனுக்கு இடங்கொடுத்து விட்டுத்தான் தாய்மொழியில் பயின்ற மாணவர்களுக்கு இடம் தருவார்கள். தாய்மொழியில் பாடத்தைப் படித்து பி. ஏ. பட்டம் வாங்கும் பட்டதாரி 'சர்வீஸ் கமிஷன்' பரீட்சைகள் எழுதும் போது ஆங்கிலத்தில் எழுதவேண்டியிருக்கிறது.

நான்: இவை தற்காலிகக் குறைகள் தானே?

டாக்டர்: ஆம். மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். பல மாணவர்கள் இதை விரும்பவில்லை. அடுத்த ஆண்டிலிருந்து ஆங்கிலத்தில் பாடங்களை நடத்த வேண்டுமென்று தெரிவித்திருக்கின்றனர்.

நான்: அப்படியானால் அவ்வாறு ஏற்பாடு செய்யப்போகிறீர்களா?

டாக்டர்: இல்லை. ஆனால் அதைப் பற்றி யோசனையும் செய்ய வேண்டியிருக்கிறது.

நான்: விஞ்ஞானத்தைத் தாய் மொழியில் போதிக்கலாமா?

டாக்டர்: போதிக்கலாம். கலைப் பெயர்களை மட்டும் ஆங்கிலத்தில் வைத்துக் கொள்ளலாம். சிலர் சமஸ்கிருதத்தில் கலைப் பெயர்களை அமைத்துக் கொள்ளலாம் என்று சொல்கின்றனர். கரியமிலவாயு என்று சமஸ்கிருத வார்த்தைகளைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுவது போலவே, ஆங்கில வார்த்தையைத் தமிழில் எழுதலாமே! உலகமெங்கனும் விஞ்ஞானக் கலைப்பெயர்களை ஒன்றாக வைத்துக் கொள்வதில் வளர்ச்சி உண்டாகும். இந்திய விஞ்ஞானிகள் சர்வதேச விஞ்ஞானிகளுடன் கலந்து கொள்ள வசதி யேற்படும்

நான்: சமஸ்கிருதத்தில் கலைப் பெயர்களை அமைக்கவேண்டும் என்று சொல்லுகிறவர்கள் காரணம் என்ன கூறுகின்றனர்?

டாக்டர்: இந்திய மொழிகளிற் பெரும்பாலன சமஸ்கிருதத் தொடர்புடையன. எனவே இந்தியா முழுவதற்கும் கலைப்பெயர்கள் மட்டும் ஒன்றாக இருக்க வசதி ஏற்படும் என்று கூறுகின்றனர்.

நான்: நீங்கள் சமஸ்கிருதக் கலைப் பெயர்களை ஆதரிக்கிறீர்களா?

டாக்டர்: நான்தான் ஆங்கிலத்தில் கலைச் சொற்கள் இருக்கட்டும் என்கிறேனே! சமஸ்கிருதத்தில் அமைத்துக் கொள்வதைக் காட்டிலும், தாய்மொழிகளிலே அமைத்துக் கொள்ளலாம்.

...யல் என்ற சமஸ்கிருத வார்த்தையைப் பயன்படுத்துவதாக வைத்துக்கொள்வோம். ஆசிரியர் பையனுக்கு 'ஸ்தனம்' என்ற சொல்லை விளக்கிப் பொருள் சொல்லுவதைக் காட்டிலும் 'பாலூட்டி வளர்ப்பன' என்று சொன்னால் பையன் எளிதில் புரிந்து கொண்டு விடுவானே.

நான்: இப்பொழுது மத்திய அரசாங்கம் அமைத்திருந்த யூனிவர்ஸிடி கமிஷனுக்கு நீங்கள் ஏதாவது சிபாரிசு செய்தீர்களா?

டாக்டர்: ஆம். யோசனை சொல்லியிருக்கிறேன், பி. ஏ. வகுப்புகளுக்கும், பி. ஏ. ஆனர்ஸ் வகுப்புக்களுக்கும் வேற்றுமை எப்படி இருக்கவேண்டுமென்று. பி. ஏ. படிப்பவர்களிற் பெரும்பாலோர் கிளார்க் வேலைகளுக்கே செல்லுகின்றனர். இவர்களுக்கு விரிவான பொது அறிவுக்காகிய பாடங்களைப் போதிக்கலாம். எடுத்த பாடத்தைப் பற்றி விரிவாகத் துருவித் துருவிப்படிக்க விரும்புவோர் ஆனர்ஸ் வகுப்புக்கள் எடுக்கலாம்.

நான்: அப்படியானால் பி. ஏ. வகுப்புக்களை எஸ். எஸ். எல். சி மாதிரி ஆக்கவேண்டும் என்கிறீர்கள்!

டாக்டர்: பி. ஏ. வகுப்பில் கணக்கை முதற்பாடமாக வைத்துக்கொள்ளுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவருக்குத் துணைப்பாடங்களாக அரசியலில் கொஞ்சம், வரலாற்றில் கொஞ்சம், பொருளாதாரத்தில் கொஞ்சம் இப்படியெல்லாம் ஓரளவு சொல்லிக்கொடுக்கலாம். ஆனர்ஸ் வகுப்பு எடுக்கிறவர் ஒரே பாடத்தை அலசி ஆராய்ந்து படிக்கட்டும்.

...ன்: பெண்களும் ஆண்களும் ஒன்றாகப் பயிலும்கூட்டுக் கல்வி முறையை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

டாக்டர்: பெண்களுக்கென்று தனிப்பட்ட கல்லூரிகள் ஏற்படுத்தப் படவேண்டும் என்பதே என் விருப்பம்.

நான்: இது தங்களின் சொந்தக் கருத்து.........?

டாக்டர்: ஆமாம்!

நான்: நீங்கள் எதற்காக இவ்வாறு நினைக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். நீங்கள் நினைக்கும் அந்தப் பொதுக் குறைபாடு கிராமப் புறங்களில் இல்லை யென்று கருதுகிறீர்கள்?

டாக்டர்: இருக்கலாம். அது பள்ளிக்கூடங்களில் இருப்பதை நான் விரும்பவில்லை. தடுக்கவே முயலுகின்றேன்.

நான்: உங்களைப் பற்றிச் சென்னை மாநிலக் கல்லூரி ஆண்டிதழில் ஒரு கட்டுரை படித்தேன். நாகரிகப் பெண்மணிகள் தங்களைத்தாமே காப்பாற்றிக் கொள்ளக் கூடும் என்னும் சித்தாந்தத்தில் உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று எழுதப் பட்டிருக்கிறதே! அதை நீங்கள் ஒப்புகிறீர்களா?

டாக்டர்: ஒருவாறு ஒப்புக் கொள்ளுகிறேன்.

நான்: மாணவர்கள் அரசியலில் பங்கெடுத்துக் கொள்ளலாமா?

டாக்டர்: மாணவர்கள் அரசியல் பிரச்சினைகள் பற்றிக் கலாசாலைகளில் நடக்கும் பொது விவாதங்களில் பங்குகொள்ள வேண்டும். தனிப்பட்ட கட்சிகளில் முக்கிய பங்கு எடுத்துக் கொள்ளக் கூடாது.

நான்: அப்படியானால் தனிப்பட்ட கட்சியில் மாணவன் பங்கு கொள்வதை நீங்கள் விரும்பவில்லை?

டாக்டர்: மாணவர்களுக்கு மட்டுமல்ல; ஆசிரியர்களுக்குக் கூட

அப்படித்தான் சொல்லுகிறேன். பொதுவாக இளைஞர்களின் உள்ளம் அனுபவம் பெறுவது. அவர்கள் அரசியலைப் பற்றிய பொது விவாதங்களில் கலந்து உண்மைகளை விளக்கிக் கொள்வது நல்லது. தனிப்பட்ட கட்சிகளுக்கு ஆளாகி விடக்கூடாது. இங்கே பெரும்பாலான பிள்ளைகள் கட்சிக் கோட்பாடுகளுடனேயே காணப்படுகின்றனர். இங்கே நடக்கும் தேர்தல்களில் கூடக் கட்சி மனப்பான்மை தான் வேலை செய்து வருகிறது.

நான்: அரசியல் கட்சிகளில் முக்கிய பங்குகொள்ளும் மாணவனைத் தண்டிப்பதுண்டா?

டாக்டர்: தண்டிப்பதற்குரிய சட்டம் பல்கலைக்கழக விதிகளில் இருக்கிறது. ஆனால் அவ்விதம் செய்வதில்லை.

நான்: நீங்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் அல்லது எந்தக் கட்சிக் கொள்கைகளுக்கு ஆதரவளிக்கிறீர்கள்?

டாக்டர்: கல்வித் துறையில் இருக்கும் நான் எந்தக் கட்சியையும் சார்ந்தவனல்ல.

நான்: தங்களுக்குக் கடவுள் நம்பிக்கைஉண்டா?

டாக்டர்: கடவுள் உண்டோ இல்லையோ, ஏதோ ஒரு இயங்கும் சக்தி வழிவகுக்கிறது என்று நம்புகிறேன்.

நான்: 'வகுப்புவாரிப் பிரதிநித்வம்' நீடிக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா?

டாக்டர்: அது இருக்கவேண்டும் என்றுதான் தோன்றுகிறது. பிற்போக்கடைந்த இனத்திற்கு அதிகமான வாய்ப்புக்களும் வசதியும் செய்துதர வேண்டும். நான் வகுப்புவாரிப் பிரதிநித்வம் மட்டும் பார்த்ததில்லை. அதற்கு



காதலன்: என் ஆருயிரே! உனக்கு என்ன வேண்டும் சொல்லு! இப்பொழுதே கொண்டுவந்து தருகிறேன்.

காதலி: கல் இல்லாத ஒருபடி அரிசி இருந்தால் போதும் நாதா!

மேலும் அதிகமான பாகுபாடுகள் பார்க்க வேண்டுமென்றே விரும்புகிறேன். ஏழை, பணக்காரன், குடியிருக்கும் ஊரின் நிலை முதலியவைகளெல்லாம் பார்த்து வசதி தரவேண்டும். ஒரு வக்கீலின் மகன் 45% மார்க்கும், ஒரு தோட்டக்காரனின் மகன் 40%மார்க்கும், வாங்கியிருந்து 'அட்மிஷ' னுக்காக வந்தால் தோட்டக்காரனின் மகனுக்குத் தான் அதிக சலுகை தரவேண்டும். இன்னும், திருச்சி, மதுரை முதலிய இடங்களிலிருந்து வரும் மாணவர்களைக் காட்டிலும் படிக்க வசதியில்லாத கடப்பை, பெல்லாரி, ராமனுதபுரம் முதலிய இடங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கு விசேஷ சலுகைகள் காட்டவேண்டும்.

நான்: இப்பொழுது நடப்பிலிருக்கும் பரீட்சை முறை அவ்வ

ளவு சிறந்ததல்ல என்று நினைக்கிறோம்.

டாக்டர்: கல்வித் துறையில் இருக்கும் பெரும்பாலான அறிஞர்கள் அவ்விதமே எண்ணுகின்றனர். இருப்பினும் அதை விட்டால் வேறுவழி......?

பரீட்சை என்று இப்போது இருப்பது போல் இல்லாவிட்டால் பிள்ளைகளில் அநேகம் பேர்களுக்குப் புத்தகங்களிலும் பாடத்திலும் அக்கரை ஏற்படாமல் போகலாம். ஊர்வம்பிலும், அரசாங்க விஷயங்களிலும், சினிமா நடிகர்கள் மேலும் கவனம் அதிகமாகச் செலுத்தப்படலாம்.

நான்: கல்விக் குழைப்பதே உங்கள் வாழ்க்கையின் நோக்கமா?

டாக்டர்: அப்படிச் சொல்வதிற்கில்லை, பரீட்சையில் தேறினவுடன் படித்த காலேஜிலேயே வேலைகொடுத்தார்கள், அரசாங்க வேலைகளுக்கு அன்று சென்றிருந்தால் வாழ்க்கையின் நிலை எப்படி இருந்திருக்குமோ?

நான்: இப்பொழுது தாங்கள் வகிக்கும் புதுப்பதவியை நினைத்து மகிழ்ச்சி அடைகிறீர்களா?

டாக்டர்: ஆம்

நான்: காரணம்?

டாக்டர்: ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்காக உழைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது என்பதுதான்.

ஃ

ஒரு மணிநேரம் ஆகிவிட்டது. பேச்சை முடித்துக் கொண்டோம்- இவ்வளவு நேரம் செலவழித்ததற்கு துணைவேந்தர் அவர்கட்கு நன்றி தெரிவித்துக் கொண்டோம்.

''ஒழுங்கு, ஒழுங்கு''

இதுதான் அவரது தாரகமந்திரம் சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் பழைய மாணவரான அவர், மாணவர்களிடத்திலே பெரும்பாலும் அமைதியையே எதிர்பார்க்கிறார். ஆர்ப்பாட்டத்தை எதிர்க்காவிட்டாலும் அவர் அதை ஆதரிக்கவில்லை. மாணவர்களுக்கு ஏற்படும் குறைகளை உடனே அறிந்து தீர்த்து வைப்பது அவரது தனிக்குணமும் பெருந்தன்மையும், ஆகும். ஆஸ்டல் அடுப்படி முதல் ஆபீஸ் அறைவரை ஒவ்வொரு அணுவும் இவர் நோக்கமறிந்து அசைகின்றன என்றால் அதில் அர்த்தமிருக்கிறது. ஒழுங்கை நிலை நிறுத்துவதில் கொஞ்சம் கடுமையான நடவடிக்கை இவரிடத்தில் உண்டென்றாலும், அன்பாகப் பேசுவதும், இரக்கம் காட்டுவதும், மன்னிக்கின்ற பெருந்தன்மையும், மிகவும் உண்டென்று உணர்ந்த மாணவர்கள் உரைக்கின்றார்கள். பொறுப்புணர்ச்சியுள்ள இந்தத் துணைவேந்தரின் நிர்வாகத்தின் கீழ் தமிழ்ப் பல்கலைக்கழகம் நல்ல முன்னேற்றத்தையும், விரிவையும் பெறும் என்று எதிர்பார்க்கிறோம்.



வேலையாள்: நம்ம தேவேந்திரா பாங்கி விழுந்துட்டுதுங்க!

அவர்: அட பாவி, உண்மையாகவா?

வேலையாள்: பிறகு பொய்யா சொல்றேனுங்க? நேற்று இடிச்ச இடி நேரே அந்தக் கட்டிடத்தைத் தானுங்க தாக்கியிருக்குது!

பாரதிதாசன் பரம்பரை

கலைமடந்தை

நெஞ்சத்தில் குளிர்வைப்பாள்; இருட்டொழிக்கும்
நிலவாகிப் பாய்ந்திடுவாள்; யாழ்நரம்பில்
சஞ்சரிக்கும் இசையாவாள்; எழுத்திடையே
தாரகையாய் ஒளிவிடுவாள்; புதுமைத்தேவி
கஞ்சமலர் முகமலர்த்தி ஆடும்பெண்டிர்
கண்வழியே நெளிந்திடுவான்; எண்ணம் செய்யும்
விஞ்சையதாம் கற்பனையில் மூழ்கி,மூழ்கி
விளையாடும் கலைமடந்தை அவள்தான் கண்டீர்!

ஓவியத்தில் உயிர்வரியாய் மின்னலிட்டே
உளிமுனையில் சதிராடிச் சிற்பம்செய்வாள்
ஆவியினில் அணுஅணுவாய் இன்பம் ஊற்றும்
அதிசயத்துக் காதலாகிச் சிரித்துநிற்பாள்
பூவினிலே கொழித்திருக்கும் மணத்தைப்போலப்
புத்திளமை கலையாத புன்னகையாய்த்
தாவிடுவாள் பெண்உதட்டில். அறிவரங்கின்
தமிழ்க்குரலாம் கலைமடந்தை அவள்தான்கண்டீர்!

கள்ளத்தால் வாழாதார்: மெய்யுழைப்பைக்
காட்டுகின்ற ஏர்மழவர் வெற்றிமூச்சாம்
பள்ளத்தில் கிடக்குமொரு சமுதாயத்தின்
பசியறுக்கும் உணர்வன்னை அவள்தான்கண்டீர்!
உள்ளத்துப் படுதாவில் எண்ணம்சேர்த்தே
ஒளிக்கவிதை தீட்டிடுவாள் நச்சுப்பான்மை
உள்ளத்தான் சாகாதாள்; வீரமாகி
ஒளிதீட்டும் கலைமடந்தை அவள்தான்கண்டீர்!

தோழர் ப. முத்துச்சாமி பாரதிதாசன் பரம்பரையினர். பாரதிதாசன் மருகரான வித்துவான் கண்ணப்பரிடம் தமிழ் கற்ற சிறப்புடையவர். செவந்திபாளையம் புதூர் அவர்தம் சொந்தவூர். —ஆசிரியர்





உயர்திரு உல்லாசம் அவர்களுக்கு

9. தெருக்கூத்து சிவனாண்டி

சிவனாண்டி வேறு யாருமில்லை.

ஒருசமயம் எங்கள் பண்ணையார் ஏற்பாட்டின்படி 'சிவராத்திரி'யன்று நடத்தப்பட்ட சங்கீதக் கோவலன் நாடகத்தில் 'மாமா'வாக வந்து சக்கை போடு போட்டவன்தான். நாடகத்தில் மட்டுமல்ல, என் வாழ்க்கையிலேயே, ஒரு சந்தர்ப்பத்தில் எனக்கு அவன் 'மாமா'வாக நடந்து கொண்டிருந்ததால் அவனை என்னால் மறக்க முடியவில்லை. அவனைத்தான் இன்று உமக்கு அறிமுகப் படுத்தப் போகிறேன்.

நேற்று எதிர்பாராத விதமாகச் சிவனாண்டியைச் சந்திக்க நேர்ந்தது. அவனைப் பார்த்துப் பல வருடங்களாய்விட்டன. இப்பொழுது ஆளே உருமாறிப் போயிருந்தான். கன்னமெல்லாம் வற்றிப்போய், கண்கள் குழி விழுந்து, தோளிலிருந்து தொங்கிக் கொண்டிருக்கும் நாமபுத்தூளில் எலும்பு மட்டும் ஒட்டிக்கொண்டிருக்கப் பார்ப்பதற்கே பயங்கரமாய் இருந்தான். பரிதாபத்துக்குரிய அந்த என் நண்பனைப் பார்க்கப் பார்க்க எனக்குப் பைத்தியம் பிடித்து விடும்போல் இருந்தது.

"என்னப்பா சிவா! இப்பொழுது என்ன செய்கிறாய்? எங்கிருக்கிறாய்?" என்றேன்.

"உலகமே என்னுடையது. அதில் நான் எங்கிருந்தால் என்ன?" என்றான்.

"சிவா! உன்னைப்பார்த்தால் ஒடித்துப்போட்ட முருங்கைக் காய்போல் இருக்கிறாய்! உன் நண்பர்கள் எல்லாம எங்கே? டிராமாக் கம்பெனி என்ன ஆயிற்று?" என்று அடுக்கினேன்.

"அந்தக் குப்பையைப் பிறகு சொல்கிறேன். முதலில் என் தாகத்திற்கு..........." என்று இழுத்தான்.

"அதோ அந்த மூலைக்கடையில் சர்பத் சாப்பிடலாம், வா" என்று அழைத்தேன். அவன் தயங்கினான்.

"வந்து.........என் விஷயம் உங்களுக்குத் தெரியாதா?...... என் தாகம்...... வந்து........." என்று, மென்று விழுங்கினான். நான் உடனே புரிந்து கொண்டேன்.

"ஓ! நீ, 'பனம்பால்' அருந்தும் பார்த்திபனோ? ஏனப்பா, இன்னும் அந்தக் கொடிய வழக்கத்தை விட்டுவிடவில்லையா? பனைமரமே இனி வளர்க்கக் கூடாது என்று சட்டம் வரப்போகுது. இந்த லட்சணத்தில் நீ இன்னும்........." என்றேன்.

"என்ன செய்வது நான்? என் வாழ்க்கையே ஓர் தரிசுக் காடு. அதில் நான் என்ன இன்பத்தைக் காண முடியும்? ஓராயிரம் கவலைகள் என் உடலைத் துளைத்துக் கொண்டிருக்கின்றன. உள்ளமோ ரணகளம். என் கவலைகளைத் தீர்ப்பதற்கு எனக்கென்ன கண்ணகியா இருக்கின்றாள்? ஆகவே இந்தக் கள் தான் என் கவலைபோக்கும் காதலி. கண்கண்ட தெய்வம்" என்றான். நான் மௌனமாக அவனை ஆற்றங்கரையிலுள்ள 'வெண்குதிரை லாயத்தி'ற்கு அழைத்துச் சென்றேன். வெள்ளத்தில் விழுந்தவனைக் கை கொடுத்துக் காப்பாற்றத்தான் முடியுமா?

"ஆமாம், உனக்கு இந்தப் பழக்கம முதலில் எப்படி வந்தது?" என்றேன்.

அவன் லேசாகச் சிரித்துவிட்டு, 'அப்பன் குடிகாரன், ஆத்தா அபின் தின்னி. பிறகு, பிள்ளை எப்படி?யிருக்கும்' என்று சொல்லிவிட்டு இரண்டாவது பாட்டிலைக் காலிசெய்தான்.

"சிவா! உன் வரலாற்றை நான் தெரிந்துகொள்ளலாமா?" என்று கேட்டு மூன்றாவது பாட்டிலை எடுத்து முன்னால் வைத்தேன்.

"நான் என்ன அரிச்சந்திரனா அல்லது அர்ச்சுனனா, என் கதையை நீங்கள் கேட்க; நான் குடிகாரன். கூத்தாடி" என்றான்.

"சிவா! பாண்டவர்களில் மூத்தவனான தருமன் ஓர் சூதாடி. பரமாத்மா கிருஷ்ணன் ஒரு காமாந்தகாரன். பரமசிவனே பாரபட்சக்காரன். இப்படியிருக்கையில் உன் வாழ்க்கையை நீ கூறுவதில் தவறென்ன?" என்றேன்.

"கூறுகிறேன் ஆனால் 'இது இல்லாமல் கதை ஓடாது" என்றான்.

நானும் 'அதை' வாங்கித் தருவதாக ஒப்புக்கொண்டவுடன் சிவனாண்டி ஆரம்பித்தான்.

"நான் பிறப்பிலேயே தாழ்த்தப்பட்டவனாகவே பிறந்தேன். அப்பாவுக்கு ஊரிலே பறையடிக்கும தொழில். பரம்பரைத் தொழிலல்லவா? என்னையும் அத்தொழிலுக்கே பழக்க ஆரம்பித்தார். ஆனால் எனக்கோ இழிந்தவனாக இருக்கப் பிரியமில்லை. நானும் மனிதன் தானே! பிறபபிலே உயர்வென்ன, தாழ்வென்ன! நீங்களே சொல்லுங்கள், என் தோல் கருப்பாயிருந்தாலும் என் உடலில் ஓடுவது சிவபபு ரத்தந்தானே? ஆகவே ஒரு நாள் ஊரைவிட்டே ஓடிவிட்டேன்.

"அயலூரில் பிழைப்பதென்றால் அடுத்தவர்களுடைய மணிபர்சை நம்பித்தான் ஆக வேண்டியிருக்கிறது. ஆனால் இதையறியாத முட்டாள்கள் என்னைச் சிலகாலம் சிறையிலே வைத்திருந்தார்கள். வெளியே வந்த பிறகு முன்மாதிரி அந்தத் தொழிலில் அதிக லாபம் கிடைக்கவில்லை. மேலும் எனக்கோ செந்தலைப் பூச்சிகளின் பாதுகாப்பு அதிகம்.

தப்பித் தவறிக் கிடைக்கும் பர்சுகளிலும் வெறும் காகிதக் குப்பைதான் இருக்கும். இருந்தாலும் என் வாழ்க்கை வண்டி ஓடவேண்டுமே!

"ஒருநாள் இதைப்பற்றித் தீவிரமாக யோசனை செய்து, கடைசியில் தேசத்தின் நலனுக்காகப் பட்டாளத்தில சேவை செய்யக் கிளம்பினேன். ஆனால் அங்கும் என்னால் இருக்க முடியவில்லை. ஏனெனில் என் கொள்கையோ மனிதர்களெல்லோரும்சமம். யாருக்கும் யாரும் அடங்கி நடக்க வேண்டியதில்லை என்பது. கர்னலும், மேகப்டனும் 'நில்' என்றால் நிற்க வேண்டும், 'நட' என்றால் நடக்கவேண்டும என்றால் யார்தான் ஒப்புக்கொள்வார்கள்? ஒருவன், தன் கட்டளைப்படி நடப்பது சரியா அல்லது மற்றவன் கட்டளைக்குப் பயந்து நடப்பதுதான் சரியா? நீங்களே சொல்லுங்கள் எது நியாயம் என்று. ஆகவே ஒரு நாள் அங்கிருந்து திடீரென்று கிளம்பினேன். கையோடு, அவர்களுக்கு உதவாமல் ஒரு மூலையில் கிடந்த சாமான்களையும் அள்ளிக் கொண்டு வேறு ஊருக்குப் புறப்பட்டேன்.

"மிலிடரி சாமான்களை விற்ற பணத்தைக்கொண்டு பத்து நாள் பொழுதைப் பயமின்றிக் கழித்தேன். ஆனால் அத்துடன் பசி அடங்கி விடுகிறதா? பதினோராம் நாளும் பசியெடுக்க ஆரம்பித்தது. இத்தோடு பட்டாளத்துக்கு என் சேவை மிகவும் அவசியம் என்று கருதி என்னை 'ராஜ மரியாதை'யோடு அழைத்துச் செல்ல ஏற்பாடு நடப்பதாகவும் தெரிந்து கொண்டேன். ஆனால் அவர்கள் கண்ணுக்குக் கலங்கரை விளக்காகத்தெரிய நான் விரும்ப வில்லை. உடனே ஒரு கிராமத்தை நோக்கி விட்டேன சவாரி.

"ஏட்டுக் குரிச்சி கிராமத்தை யடையும்போது ஏறக்குறைய இருட்டிவிட்டது. அப்பொழுது முன்னால் ஒரு ஒற்றைமாட்டு வண்டி நின்று கொண்டிருந்தது. அருகில் சென்றேன். வண்டியில் இருந்தவர் பெரிய மனிதர்போலத் தோன்றினார். வண்டியோ சகதியில் மாட்டிக் கொண்டு நகர மறுத்தது. பின்னர் இருவருமாகச் சேர்ந்து பைதாக்களை உருட்டிச் சகதியினின்றும் வெளியேற்றினோம். என்னுடைய உதவிக்காக அவர் மிகவும் நன்றி தெரிவித்தார். என்னைப் பாராட்டினார். புகழ்ந்தார். ஆனால் இவைகளினால் என் பசி தீர்ந்துவிடுமா?

பத்திரிகைப் பலன்

இந்தியாவிலும், இலங்கையிலிருந்தும் . வெளியாகும் ஆங்கில, தமிழ் வார வெளியீடுகளில் வாரப் பொதுப் பலன்கள் கூறப்படுகின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமாக வாசகர்களுக்குச் சோதிடம் சொல்லுகின்றன. பத்திரிகைகளின், வாழ்க்கை, எதிர் காலம் என்பன வாசகர்களின் கையில் இருந்த காலம் போய், இப்போது வாசகர்களின் காலபலன் பத்திரிகைகளிடம் சிக்கிக் கொண்டிருப்பதும் ஒரு விந்தைதான்! இது மக்களின் தலைஎழுத்து.

— ஈழகேசரி

ஆகவே அவர் பின்னாலேயே சென்றேன். என் காரியமும் வெற்றி பெற்றது.

"என்னை வீட்டுக்கு அழைத்துச் சென்று, என் பசியைப் போக்கியதோடல்லாமல், எனக்காக ஒரு வேலையும் கொடுத்துதவிய அந்தக் கொடைவள்ளலின் பெயர் ஞானசம்பந்த முதலியார். பெயருக்கேற்றாற் போல அவர் எதுவும் தேவாரம் பாடித் திருமறைக் காட்டின் கதவைத் திறக்கவுமில்லை. திருச் சைவத்தை வளர்க்கவுமில்லை. அதற்கு மாறாக, அவரது மேஜையிலே மேனாட்டுச் சரக்குகள் மிளிர்ந்தன. புத்தம் புதிதாக அவ்வப்போது தருவிக்கப்பட்ட பிராந்தி, விஸ்கி வகைகள் தான் இவரது தாகத்தைத் தணிக்கும் தண்ணீர்ப் பொருள்கள். தினம் இரண்டு கோழிகள் ஸ்பெஷலாக அறுக்கப் பட்டுப் பொறிக்கப்படும். இவரது மனைவிகள் இரண்டுபேரும் ஒருவர் பின் ஒருவராக இறந்து விட்டதால், இப்பொழுது இவர் தனியாகவே இருந்து 'தசரத' காரியத்தை நடத்தி வருகின்றார். இப்படிப்பட்டவர் எனக்கு எஜமானாகக் கிடைத்தது நான் முன் செய்த புண்ணியந்தான். அவரிடம் கேட்டு வாங்கிக் குடிப்பது போக, அனார் அரைகுறையாக விட்டு வைத்த சீசாக்களைக் காலி செய்வதெல்லாம் என் பொறுப்பு. காலி சீசாக்களை விற்கும் பொழுது மீதியாயிருக்கும் ஓரிரு பாட்டில்களைக் காலி செய்து கொடுப்பதும் நான் தான். இதற்காகவெல்லாம் முதலியார் என்னை ஒருநாளும் கோபித்ததே இல்லை. ஏனெனில் அவருக்கு இது விஷயம் ஒன்றுமே தெரியாது எப்பொழுதும் அவர் என்னைச் சுத்தமாக இருக்கும்படி சொல்லியிருப்பதால் என சட்டை வேட்டி அழுக்காகும் பொழுது அவருடைய சட்டை வேட்டிகளை உபயோகப்படுத்திக் கொள்ளத் தயங்க மாட்டேன்.

"யாருக்குத் துரோகம் செய்தாலும், நான் என் வயிற்றுக்கு மட்டும் ஒருநாளும் துரோகம் செய்ததே இல்லை. நான் என் எஜமானனுக்கு உண்மையாக ஓடியாடி உழைக்க விரும்பினேன். உழைப்பதற்கேற்ற உரம் வேண்டாமா? உரத்தை வளர்க்க உணவு தேவை. ஆகவே, ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாக உண்பேன். ஆனால் நான் வந்த இருபத்தி மூன்று நாளைக்குள் அந்தக் குடும்பத்தின் 'செலவு மீட்டர்' இருநூறு ரூபாய் அதிகம் காட்டிய காரணத்தினால் ஒருநாள் எனக்குப் பிரிவு உபசாரம் நடத்தப்பட்டது. சம்பளக் கணக்கு சிக்கலில்லாமல் தீர்த்து வைக்கப்பட்டது.

"எட்டுக்குறிச்சிக்கு என் கடைசி வணக்கத்தைச் செலுத்திவிட்டு அங்கிருந்து கிளம்பினேன். இனி எங்கு செல்வது? உலகத்தின் எந்த மூலையைப் பார்த்தாலும் சுயநலம் சொக்கட்டான் ஆடுகிறது. போட்டி பொறாமைகள் நாட்டியம் நடத்துகின்றன. வஞ்சகம் சூது வாடிக்கைக் காட்சிகள். இதிலே வாழ வசதியிருந்தாலும் அது வளமாக இருக்க முடியுமா?"

சிவனாண்டி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு விட்டு ஐந்தாவது பாட்டிலைக் காலி செய்தான்.

"சிவா! உன் தெருக்கூத்து அத்தியாயம் எப்பொழுது தொடங்குகிறது?" என்றேன்.

"எட்டுக்குரிச்சியை விட்டு விலகியதும் அடுத்தபடியாக நடேசபிள்ளை நாடகக் கம்பெனியில் தான் அடைக்கலம் புகுந்தேன். எந்தத் தொழில் செய்ய மறுத்து வீட்டைவிட்டு கிளம்பினேனோ அதே பறையடிக்கும் வேலையைத்தான் நாடகக் கம்பெனியிலே தந்தார்கள். இதற்காக நான் இரண்டு சொட்டுக் கண்ணீர் விடுவதன்றி வேறு என்ன செய்ய முடியும்?

"பகலிலே தமுக்கடித்து விளம்பரம் செய்வதும், இரவிலே டிக்கட் கிழித்துக் கொடுப்பதும் என்னுடைய வேலையாகும். பெரும்பாலும் கிராமங்களிலதான எங்கள் 'கூத்து' நடைபெறும். ஆகவே என் வேலை எனககு மிகவும் சுலபமாக இருந்தது.

"மின்னற் காலத்தில் கிளம்பும் காளான்களைப்போல ஆங்காங்கு அற்பாயுசு நாடகக் கம்பெனிகள் முளைத்துக் கொண்டிருந்த காலம் அது; கனத்த தொண்டைக்காரர்களெல்லாம் 'கம்சன்' வேஷம்போட ஆரம்பித்தார்கள். ஒரு ஐம்பது தெலுங்குக் கிர்த்தனங்களை மனப்பாடம் செய்து பாடிவிட்டால் போதும்; அவன் ஒரு ராஜபார்ட்! பட்டணத்தின் மூலை முடுக்குகளிலே, முக்கால் ரூபாய்க்குப் படுக்கை விரிக்கும் மோகினிகள்தான் ஸ்திரீ பார்ட். இப்படியாக உருவாகிக்கொண்டிருந்த நாடகக் கம்பெனியிலே 'பேரும் புகழும்' பெற்றதுதான் நான் ஒட்டியிருந்த நடேசபிள்ளை நாடகக் கம்பெனி!

"எங்கள் கம்பெனியிலே என்னைச் சேர்த்து ஆண்கள் பத்துப் பேர் இருந்தனர். சிறுவர்கள் பத்துபபேர். இரண்டு பெண்களும் இருந்தனர். சில சமயம் அவர்களே எங்கள் கம்பெனியில் உள்ள இந்திரர்களுக்கு ஊர்வசியாகவும ரம்பையாகவும் உபயோகப்படுவார்கள். அடிக்கடி நாங்கள் நடத்தும் நாடகங்கள் கோவலன் சரித்திரமும், வள்ளி திருமணமும்தான்.

"இந்தக் காலத்திலே சிங்காரக் கொட்டகை எனறு விளம்பரப்படுத்தப்பட்டிருப்பதெல்லாம் வெறும் தென்னை மரத்துக் கிற்றுக்கொட்டகைதான். கொட்டகையின் முக்கால் பாகம் தரைமகா ஜனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும். மீதி பாகத்தில் சிறுசிறு திண்டுக்களைக்கட்டி அதிலே பனைமரத்தைப் பாதியாகப்பிளந்து படுக்கையாகப் போட்டு, அதைப் 'பெஞ்சு' என்று விளம்பரப்படுத்துவார்கள். ஐந்தாறு ஓட்டை நாற்காலிகள் தான் உயர்ந்த வகுப்பு டிக்கட்டுகள்.

"ஐந்தாறு சின்கள், இரண்டு மூன்று பெட்ரோமாக்ஸ் லைட்டுகள், தபேலா, ஆர்மோன்யம் இவைகள்தான் ஒரு நாடகத்திற்கு வேண்டிய முக்கிய சாமான்கள். இவை எல்லாவற்றையும் விட மிகமிக முக்கியமானது ஒரு பீப்பாய் பனம்பால்!

(அடுத்த இதழில் முடியும்)

சிறுவர் அரங்கம்

வைத்தது சட்டம்!

அந்தான்



வெள்ளிமலை என்ற நாட்டை வீரசேனன் என்ற அரசன் ஆண்டு வந்தான். வீரசேனன் ராஜசாதியிற் பிறந்தவன். "ராஜசாதியா? அதென்னசாதி?" என்று யோசிக்கிறீர்களா, அதாவது அரச பரம்பரையிலே பிறந்தவன். அரச பரம்பரை என்றால் அவனும் ராஜா, அவனுடைய அப்பாவும் ராஜா, ஐயாவும் ராஜா, பாட்டனும் ராஜா எல்லோரும் ராஜாக்கள்தாம். அதுபோலவே அவனுக்கு மந்திரி சாதியிற் பிறந்த மந்திரி ஒருவன் இருந்தான். இரண்டுபேரும் கூடி அந்தநாட்டை அரசாண்டு வந்தார்கள்.

ஒருநாள் மந்திராலோசனை மண்டபத்தில் அரசனும் அமைச்சனும் தனித்திருந்தார்கள்.

"மந்திரி" என்று வாய்விட்டுக் கூவினான் வீரசேனன்.

"மகாராஜா" என்று தானிருக்கு மிடத்தை உணர்த்திக் கொண்டான் மந்திரி.

"இப்பொழுது என்ன செய்யலாம்?" என்றார் ராஜா.
"எதை வேண்டுமானாலும் செய்யலாம்" என்றான் மந்திரி.

"அதைக் கேட்கவில்லை மந்திரி! அந்த ஆற்றங் கரையில் பார்த்தோமே ஒருகுடிசை......."

"ஆமாம் அதன்மேல் ஒரு அழகான சுரைக்கொடி படர்ந்திருக்கிறது"

"சீச்சீ, அதை யார் கேட்டார்கள்? அந்தக் குடிசைக்குள் இருக்கிறாரே ஒருமுனிவர்...."

"அவரைச் சொல்லுகிறீர்களா? அவருடைய தாடி ரொம்ப நீளம்"

"அட, அவசரக்குடுக்கை! அதைச் சொல்லவில்லை ஐயா! அந்த முனிவர் வளர்க்கிறாரே ஒருபெண். அந்தப் பெண் எவ்வளவு அழகாயிருக்கிறாள்! அடடா! அவளைப்



பார்த்துக் கொண்டேயிருந்தால் பசிகூடத்தோன்ருது போலிருக்கிறதே! மந்திரி அவளை எப்படியாவது என் ஆசைக் கிழத்தியாக்கி விட்டால்''

"மகாராஜா! அவளையா? இந்தச் செய்தி முனிவர் காதில் விழுந்தால் உங்கள் உயிருக்கே ஆபத்து வந்து விடுமே! முனிவருக்குப் பொது மக்களிடம் நல்ல செல்வாக்கிருக்கிறது: அவர் தலையசைத்தால் அரண்மனையே நாசமாகிவிடும். ஆனலும் அதற்கும் ஒருவழியிருக்கிறது. பலரறிய நீங்கள் அந்தப் பெண்ணை மணந்து கொண்டால் உங்கள் எண்ணம் நிறைவேறலாம். அநேகமாக முனிவர் தடையொன்றும் சொல்லமாட்டார்''

"சரி, அப்படியே கல்யாணம் செய்து கொண்டால் போகிறது''

"அவ்வளவு எளிதல்லவே அந்தக் காரியம், நம் நாட்டுச் சட்டம் அதற்கு இடங்கொடுக்காதே!''

"இடங்கொடுக்காதா அது என்ன சட்டம் மந்திரி?''

"ஒருமனைவி யிருக்கும் பொழுது இன்னொரு கல்யாணம் செய்து கொள்ளக்கூடாது என்பது நம் நாட்டுச் சட்டம்.''

"அதை யார் ஏற்படுத்தினர்கள்?''

"மகாராஜா, தாங்கள் பட்டத்திற்கு வந்த மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்காக நாட்டிற்குச் செய்த நன்மைகளில் இந்தச் சட்டமும் ஒன்று''

"சீச்சி என்ன முட்டாள்தனம் செய்திருக்கிறீர்கள்? இதை யெல்லாம் ஏன் சட்டமாக்கித் தொலைத்தீர்கள்? இதிலிருந்து தப்புவதற்கு வேறுவழி யொன்றுமில்லையா?''

"இல்லாமல் போகுமா மகாராஜா! மனிதனின் மூளை வேலை செய்தால் எந்தக்காரியத்தைத் தான் சாதிக்க முடியாது. சட்டம் என்பது என்ன? மனிதனுடைய வசதிக்காக மனிதனல் ஏற்படுத்தப்பட்டது தானே''

"அப்படியானல்....''

"ஒருமனைவி இருக்கும் பொழுது இன்னொரு கல்யாணம் செய்து கொள்ளக்கூடாது என்பது கட்டாயமல்ல என்று சட்டத்தைத் திருத்தியமைத்தால் சட்டம்தானே இடங்கொடுக்கிறது."

"சபாஷ்! மந்திரி என்ற பெயர் உமக்கே தகும்" என்று வீரசேனன் தன் மந்திரியைத் தட்டிக் கொடுத்தான். திருத்தப்பட்ட சட்டம் அமுலுக்கு வந்த கொஞ்ச நாளைக்கெல்லாம், முனிவரின் முழுச் சம்மதம் பெற்று, அவர் மகளை வீரசேனன் நாடறியத் திருமணம் செய்து கொண்டான்.

பல ஆண்டுகள் ஓடி மறைந்தன. இப்பொழுது வீரசேனன் கிழவன். அவனுடைய மந்திரியும் அப்படித் தான்.

அரசனுக்கு ஒருமகள் இருந்தாள். அரசன் மகளெல்லாம் அழகாய்த்தானிருக்க வேண்டுமென்பதற்கு ஏதேனும் சட்டமுண்டா என்ன? வீரசேனன் மகள் அவ்வளவு அழகாயிருக்கமாட்டாள். வீரசேனன் அவளைத் தன் கீழ் உள்ள சிற்றரசன் ஒருவனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்திருந்தார். சிற்றரசனுக்கு அவளைக் கல்யாணம் செய்துகொள்ளவே விருப்பமில்லை. அரசனுக்குப் பயந்து கொண்டும் பணத்திற்கு ஆசைப்பட்டும் கல்யாணம் செய்து கொண்டான். கொஞ்ச காலத்திற்குப் பிறகு அவனுக்குச் சிறிது மனோதிடம் உண்டாயிற்று. ஒரு அழகான பெண்ணைப் பார்த்து இரண்டாந்தாரம் கல்யாணம் செய்து கொண்டான். இந்தச் செய்தி வீரசேனனுக்கு எட்டிற்று.

மீசை படபட வென்று துடித்தது. பல்லை 'நெற நெற' வென்று கடித்தான்.

"மந்திரி! ஒரு சின்னப்பயல் என்னை அவமானப் படுத்திவிட்டானே. என் மகளை வைத்து விட்டு வேறு கல்யாணம் செய்யவேண்டுமென்றால் அவனுக்கு எவ்வளவு நெஞ்சழுத்த மிருக்கவேண்டும்?"

"மகாராஜா! அதற்கு நம்நாட்டுச் சட்டம் இடங் கொடுக்கிறதே"

"சட்டம் இடங்கொடுக் கிறதா? என்ன மந்திரி புதிர் போடுகின்றீர்?"

"ஆமாம்! நாம் தான் உங்கள் இரண்டாவது



திருமணத்தின் போது சட்டத்தைத் திருத்திஅமைத்திருக்கிறோமே!.''



"அடடா, மதிமோசம் போய் விட்டோமே மந்திரி! நாம் வெட்டிய குழியில் நாமே வீழ்ந்து விட்டோமே! அதிகாரமிருந்தும் பலனற்றுப் போய்விட்டதே. பல் விழுந்த பாம்பைப் போலானோமே மந்திரி''

"ஆமாம், மகாராஜா, ஆமாம்''

"அந்தச் சட்டத்தை நாம் திருத்தியிருக்கக் கூடாது''

"அந்த யோசனை நமக்கு முன்னமேயே இருந்திருக்க வேண்டும்''

"ஆம், இளமையின் வேகத்தில் நம் நலனுக்காகச் சட்டத்தைத் திருத்தினோம். நமக்குப் பயன்தருமென்று எந்தச்சட்டத்தைத் திருத்தினோமோ, அந்தச் சட்டமே இன்று என்மகள் துன்புறுவதற்கு இடங்கொடுக்கிறது. மந்திரி, என் மகளைக் காப்பாற்ற வேறுவழியில்லையா?''

''காரியம் மிஞ்சிவிட்டது மகாராஜா! முன்னேற்பாடாயிருந்திருந்தால் தடுத்திருக்கலாம். அவன் வேறு பெண்ணுக்குத் தாலிகட்டி விட்டானே! இனி வேறுவழியில்லை.''

"மந்திரி, இனிமேலாவது நம்நாட்டில் 'இந்த அக்கிரமங்கள் நடக்காமலிருக்கட்டும். சட்டத்தை முன்போலத் திருத்தியமைத்து விடுங்கள்'' என்று ராஜா அழமாட்டாத குறையாகச் சொன்னார்.

''உத்தரவு மகாராஜா'' என்று வெகுபணிவாகத் தலையசைத்தார் மந்திரி.



இருபதாம் அத்தியாயம்

ரசமான உரையாடல்!

''வெளிநாட்டிலிருந்து வாணிகம் என்ற வேடத்துடன் வெள்ளையர் நாட்டில் நுழைந்தனர். கண்டமெங்கும் அங்காடிகள் அமைத்தனர். நாள் ஆக, ஆக........ஆண்டவர்கள் சரிந்தனர், அடிமைகளாகத் தொடங்கினர். வயிற்றப்பனுக்கு வழிபெற வேண்டி வண்டி வண்டியாகப் பண்டங்களைக் கொண்டுவந்து குவித்துப் பிண்டம் பெற்றுவந்த அண்டைநாட்டுப் பரங்கியர் ஆளவந்தார்களாகப் பார்க்கின்றனர். இது அநீதி. மேலும் வங்காளத்திலும் வாலாட்ட ஆரம்பித்துவிட்டனர். அவர்களின் துடுக்குத்தனத்தை ஒட்ட நறுக்க வேண்டும். கொஞ்சமும் நெஞ்சில் இரக்கங்காட்டாமல்! கூண்டோடு அந்த வெள்ளைக் கழுதைகளை வைத்துக் கொளுத்த வேண்டும். அழிக்க வேண்டும் அந்த ஆணவக்காரக் கும்பலை! ஆவி சோர்ந்து அலறவிடவேண்டும். அவர்களின் கெடுமதி ஒழிக்கப்படவேண்டும். அகம்பாவம் அழிக்கப்பட வேண்டும். ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வந்திருக்கிறோமே என்று கொஞ்சமும் சிந்திக்காமல் நாட்டுக் குடிமக்களிடம் பகைத்துக் கொள்கிறார்கள். இதற்கொரு வழி செய்யப்பட வேண்டும். இந்த வெள்ளைக்காரத் தொல்லையைச் சொல்லவே இத்தனை தூரப்பிரயாணம செய்யவேண்டிவந்தது...''

இப்படியெல்லாம் ஸுராஜ் சொல்லவில்லை. மிகச் சுருக்கமாகவே தன் வார்த்தைகளை முடித்துக் கொண்டான்.

''பாதுஷா! தங்கள் புகழ் கெடுகிற மாதிரியில் இந்தப் பண்டகசாலைக்காரர்கள் நடந்து கொள்கிறார்கள். கொள்ளையடிக்கிறார்கள். கொலையும் செய்கிறார்கள். இதற்கு எப்படியும் ஒரு மார்க்கம் காட்ட, பெருமைக்குரிய பாதுஷா — மகராஜ் — அவர்களிடம், எனது தாதா கேட்டுவரப்பணித்தார்''

அவ்வளவுதான் கூறிய வார்த்தைகள்! இதனைக் கூறி முடித்தவுடன் அவன் முகத்தில் சிறு பயம் — பச்சையாகப் பெரிய பாதுஷாவிடம் புளுகினோமே என்ற அச்சம் — ஏற்பட்டது. ஓரக் கண்ணால் முடீன் கானைப் பார்த்தான. அவன் சிறு புன்னகை காட்டினான். அலிவர்திகானுக்கு ஸுராஜ் டில்லிக்குப் புறப்பட்டதே முதலில் தெரியாது. ஆனால் பாதுஷாவிடம் புளுகினான். இந்த நேரத்தில் முடீன் தன் பைகளைத் தடவிப் பார்த்துக் கொண்டான். என்ன ஏமாற்றம். அங்கே அந்தக் கடிதங்களில்லை!

"அடடா, இவ்வளவு நேரம் மறந்து விட்டேன். என்னைக் காப்பாற்றிய வீரனல்லவா நீ? சபாஷ், ஸுராஜ் உன் வீரத்தைக்கண்டு பெருமையடைகிறேன். மனமாரப் பாராட்டுகிறேன். முகலாய சாம்ராஜ்யம் இன்று தீரர்கள் தேவை, தேவை யென்று கூவுகிறது. கிடைக்காமல் திணறுகிறது. சரியான சூரன் நீ!"

"தங்கள் புகழ்ச்சிக்கு நன்றி. ஆனால்......"

"அத்துடன் நிறுத்துவானேன்? அச்சமின்றி வேண்டியதைச் சொல்லு"

"நான் முன்னரே கூறி விட்டேன், நான் வந்தகாரியத்தை"

"பிறகு......"

"எப்படியும் அவர்களை ஒழிக்க வேண்டியதுதான்"

"இதுதானே? அது தீர்ந்து போன சங்கதி. நாளைக்கே அவர்கள் கோட்டையை நம் படை தாக்கட்டும்"

"அவசரம் ஆத்திரக்காரரின் சொத்து, அதுநமக்குத்தேவையில்லை"

"என்ன......எது அவசரம்? இப்ராகிம், உன் உறவினன், நமது இனத்தவன், இஸ்லாம் மதத்தவன் கொல்லப்பட்ட பின்னருமா? அவன் ஆவி துடித்தது போல அந்த அந்நியர்களை அங்கங்கள் பதறப் பதற வெட்டி வீழ்த்து! அவர்களின் பெண்டு பிள்ளைகள் கதறக் கதறக் கொன்று குவி! பிணங்களை அடுக்கிப் பீரங்கியைத்திருப்பு! சிசுக்களின் சிரங்களையும் சீவு! விடாதே—பரிதாபப்பட்டு! சிறுமதிக்காரர்கள் சிந்தட்டும் கண்ணீர், கண்களால் கக்கவேண்டும் குருதி! முகலாயன் ஒருவனின் உயிர் ஆயிரம் அந்நியர்களின் பிணங்களுக்குச் சமம்— அதனை நிலைநாட்டு! இறந்த இப்ராகிமுக்கு வெள்ளைப் பிணங்களால் சமாதி கட்டு! அவன் ஆவி திருப்தியடையட்டும்! அச்சம்விடு! டில்லி பாதுஷா உன் பக்கம்—அல்லாவும் துணை இருக்க வர மறுக்கமாட்டார்"

"செய்யலாம். இதனை நானே கூட, என தாதாவின் உத்தரவும், உதவியுமின்றியுங் கூட—செய்திருப்பேன். ஆனால் அவர்கள் பலம் உடையவர்கள்!"

"படைதானே பயப்படாதே! முகலாயப் படை நாளை உன தலைமையில் கிளம்பும். திருப்திதானே?"

"படை பலத்தை நான் சொல்லவில்லையே"

"பின் பணத்தைக் கண்டு பயப்படுகிறாயா? அந்தப் பணம் நமது குடிகளின் வியர்வையிலே வெந்த வெள்ளிப்பணம்! நம் கஜானா காலியானாலும் கவலை

யில்லை. அந்தக் காலிகளுக்குக் கூலிகொடுத்தாக வேண்டும்''

"பணம்......அந்தப் பரங்கிய ரிடம் ஏது? இருந்தாலும் நாடாளும் நம்மிடம் நாடுதாண்டி நாடு வந்திருக்கும் நாதியற்ற நாடோடிகள் போட்டிபோட முடியுமா?''

"வளர்த்தாதே. வார்த்தைகளைச் சுருக்கு''

''அவர்களிடம் மூளை பலம் அதிகம்''

அவர்கள் உரையாடல் முடிந்ததுபோலத் தெரிந்ததும் முடீன்கான் தொடர்ந்துமுடுக்கி விட்டான்.

"அவர்களுக்கு ஏழாவது அறிவு ஒன்றிருக்கிறது. ஒரு பகுதி அவர்களிடம். மறுபகுதி நமமிடம். அவர்கள் தாயத்தார்களையே தட்டிவிடுவார்கள். நாம் முட்டிக்கொள்வோம்''


"நம்மிடம் மூளைபலம் குறைவென்று கருதுகின்றாய்? கோழைகள்! குலக்கோடாரிகள்!''

"கோழையல்ல, மகாராஜ்! இப்பொழுது நீங்கள் தானே என் வீரத்தை வியந்தீர்கள். குவலயத்தையே குலுக்கிடவும் கலங்காத உள்ளம் உண்டு. ஆனால் அவர்களிடம் தந்திர புத்தியுண்டு. அதனால்தான் பார்க்கிறேன்''

ஸுராஜ் உண்மையில் பாதுஷாவின் நிலைமையில்பேசுபவன் ஆனால் முடீன்கானின் அறிவுரைப்படி சாந்தமாகவே பேசினான். அவர்கள் நினைத்த பலன் கிடைத்தது. பாதுஷாவின் கோபத்தைக் கிளறிவிட வேண்டும். அதன் பயனாகத் தக்க உதவிகள் அத்தனையும் பெற வேண்டும் என்று எண்ணினார்கள். பலன் கைமேல் கிடைத்துவிட்டது. ஸுராஜ் வளர்த்திப் பேசுவதைப் பாதுஷாவால் சகிக்க முடியவில்லை. அவன் மீது கோபப்படுகிற அளவு பொறுமை காட்டினான் அவன். அதுவும் ஒரு நன்மைக்கே என்று காரியம் நடந்தது!

உடன் முடீன்கான் வெள்ளையர்களின் நுழைவைப் பற்றி விளக்கமாக எடுத்துரைக்கலானான்.

'அந்தவெள்ளையத் திருட்டுத் தடியர் கூட்டம் இத்தரணியில் புகுந்த கதையொன்றே அவர்களின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு ஏற்ற உதாரணம்! இந்தியாவுக்குப் புதிய மார்க்கங் காண அவர்கள் துடித்த துடி உலகம் அறியுமே! பார்த்தலோமியா டயஸும், வாஸ்கோடிகாமாவும் தானேவழி வகுத்து விட்டார்கள்! பாருங்களேன், அவர்களின் திமிரை! அடுத்து வந்த காப்ரல் கள்ளிக்கோட்டையரசர் ஸாமொரினுடன் போரே தொடுத்துவிட்டான். திராவிடத்தில் நறுமணம் வீசிற்று, அவர்கள் மூக்கைத்திட்டி விட்டார்கள்! போர்த்துக்கிசியரின் அகம்பாவம் திடீரெனவளர்ந்து பிறகு பட்டென்று வெடித்து விட்டது. டச்சுக்காரர்கள மட்டும் என்ன? இவர்களுக்கு மட்டமா? தூது வந்தே இந்த நாட்டின் தூய்மையைக் கெடுத்து விட்டார்கள். அக்பர் பாதுஷா காலத்தில் இரால்புபிட்ச் வந்தான். ஜான் மில்டன் ஹால் அவனைத் தொடர்ந்தான். ஜஹாங்கிர் பாதுஷா காலத்தில் ஜரோகா தெரிசனத்திற்குக் காத்துக் கிடந்தான். வில்



லியம் ஹாக்கின்ஸ், வில்லியம் எட்வர்டிஸ் தூது வந்தனர். ஸர் தாமஸ்ரோவும் எட்வர்டு டெர்ரியும் பரங்கியரின் பராக்குக் கூறுபவரே! கோவா, செளல், டய்யூ டாமன், பஸின் என்று போர்த்துக்கீசியர்கள் பிடித்துக்கொண்டார்கள். டச்சுக்காரர்கள் பிப்பிலிப்பட்டினம், பழவேற்காடு, சதுரங்க பட்டினம், கொச்சி என்று ஆக்ரமித்து விட்டார்கள். தரங்கம்பாடி, ஸொராம்பர் — அந்நிய ஆதிக்கம மிகுந்த இடங்களே. சந்திர நாகூர், மசூலிப்பட்டினம் புதுச்சேரி பிரஞ்சுக்காரர்களின் பிரதேசங்கள் — எப்படிப் பரவினார்கள்? எல்லாம் பிரித்து விட்டு வேடிக்கை பார்க்கும் விசித்திரமான திட்டத்தால் தான்! அது மட்டுமல்ல ஒட்டாத ஜோடிகளை முடிந்துவிட்டு அவை தவளையும், எலியுமாக தாம் கழுகாகிடும கதைத் திட்டத்தால் தான்!"

இந்த வரலாற்று உண்மைகளைச் சற்றுக் காரமான வார்த்தைகளால் பின்னிக் கோத்து வருகையில் பாதுஷா குறுக்கிட்டார்.

"ஹூக்ளியிலே அவர்கள் பட்டபாடு தெரியாதோ!



பாதுஷா ஷாஜஹானால் பட்ட உதைகள் எவ்வளவு?"

"ஹூக்ளி நிகழ்ச்சி எனக்கு நன்றாகத் தெரியும். தாதா அடிக்கடி சொல்வார். ஆனால் அதற்கு மூன்று மாதங்கள் போராட வேண்டியிருந்தது மறக்கவேண்டாம்"

"அன்றைக்கும் கொள்கை தான் காரணம். முஸ்லீம் யாத்திரிகர்களின் கப்பல்களைப் போர்த்துக்கீசியர்கள் பிடித்துக் கொண்டார்கள். சுங்கவரி கேட்டார்கள். திக்கற்ற சிசுக்களைப் பிடித்து அடிமையாக்கினார்கள்"

"கொடுமைகளின் கோடியில் ஒரு துளி இது—ஆனால் பெரு வீரர் ஷாஜஹான் மூன்று மாதங்கள் செலவிட வேண்டியிருந்தது. காரணம் அவர்கள் பக்கம் ஒருவகையான பலம் அதிகம்"

"அப்படியானால்......?"

"அது மட்டுமல்ல பாதுஷா, அந்தப் போர்த்துகீசியர்களை விட ஆயிரம் மடங்கு அதிக வலுவுடையவர்கள் ஆங்கிலேயர்கள்! சூரத்திலே விதைதூவினர், வளர்ந்து விட்டதே! மசூலிப் பட்டினம், பாலஸோர், ஹரிஹரபுரம், மதராஸ், தேவ

னும் பட்டினம், பம்பாய், கல்கத்தா என்று பெருக்கிவிட்டார்கள் அந்தத் தந்திர நரிகள். அதனால்தான் யோசிக்கிறேன்"

"உன்னை வீரனென்று எடைபோட்டேன். ஷுராஜ்! எனது சாய்ந்த தராசும், தேய்ந்தபடிக் கல்களும் எடையைத் தவறாகப் போட்டுவிட்டன போலும். உன ஆயுள் முழுவதும் யோசி. வங்காளம் வீழ்கின்றவரையிலும் யோசி. உன் கோட்டை, கொத்தளங்கள் துகள் துகளாகச் சிதறுகிறவரை யோசி. என் புகழ் மங்கும் மட்டும் யோசி. ஆனால் தனியிடந்தேடு. யோசிக்க முகலாய பாதுஷாவின் கொலுமண்டபம் ஏற்றதல்ல. யோசி. போ, போ!"

"மாட்சிமை தங்கிய பாதுஷாவே, மன்னிக்க வேண்டும். தங்கள் மனநிலையை அறியவே ஓடோடியும் வந்தேன். யோசித்துக் கொண்டா நிற்பேன். இப்பொழுது புரிந்து கொண்டேன். இன்னும் சில நாட்களில் தைமூர் கொள்ளையை விடப் பெருங் கொள்ளை அந்த வெள்ளைய வெளியில் அடிப்பேன். டெல்லிக்குச் சேதி வரும். அப்பொழுது என் எடை சரியென்று புலப்படும். அந்த வெற்றியை நீங்களே கொண்டாடப் போகிறீர்கள். தங்கள் கட்டளையை மேற்கொண்டேன். வணக்கம் கணக்கில! வாழ்க நுங்கள் கொற்றம்!"

ஸுராஜ்-உத்-தௌலா வணங்கினான். முடின்கானும் பணிந்தான்.

"வருகிறோம், விடை பெறுகிறோம்"

என்றனர் இருவரும்.

"இல்லை நீங்கள விருந்தினர்கள். இங்கு தங்கிச் செல்ல வேண்டும்"

பாதுஷா கூறிவிட்டார். மாகாணங்களை ஆளுபவர்களை நவாப் என்பர், சுபேதார் என்ற அதிகாரிகளும் உண்டு. அலிவர்திகான் அத்தகையவர்களில் ஒருவன். அவனது பேரன் ஸுராஜ். அதுவும் பாதுஷாவின் உயிரையே மீட்டிருக்கிறான். அவனை விருந்தூட்டாமல் அனுப்பலாமா? கூடாதுதான்!

அப்பொழுது பாதுஷாவின் கண்களில் யாரோ ஒரு காவலாளி உள்ளே நுழைவது தெரிந்தது. ஆம், உண்மையிலேயே ஒரு காவலாளி வந்து மண்டியிட்டான். "பாதுஷாவின் புகழ் ஓங்குக" என்று கரங்களைக் கண்ணில் ஒத்தி "சிறு துரும்பாகிய யான் ஒரு சேதியுடன் வந்துள்ளேன்" என்று மார்பிலும், பிறகு மண்ணிலும் கைகளை வைத்துத் தலையைத் தாழ்த்தினான். ஒரு காகிதச் சுருளை நீட்டினான். விடைபெற்றுத் திரும்பினான். அவன் அதைக் கையில்வாங்கிப் பிரித்துப் படித்தான். மன்னன முகம் சிவந்தது, கண்கள் கனலைக் கக்கின. அவனது வளைந்த மீசை துடித்தது!

இருபத்தொன்றாம் அத்தியாயம்

விருந்து!

பாதுஷா ஸுராஜுக்கு மிகவும் விமரிசையான விருந்தும், பாராட்டும் ஏற்பாடு செய்திருந்தான். டில்லியே அமர்க்களப்பட்டது. அரண்மனை யெங்கும் குதூகலம்

வழிந்தது! எங்கும் ஆட்டமும் பாட்டமும்! எங்கு திரும்பினாலும் இசைமுழக்கம்! எப்பக்கத்திலும் காதுக்கினிய கீதம், அதற்கேற்ற நாதம் எழுப்பும் இசைக்கருவிகள் முழங்கிக் கொண்டிருந்தன.

மணிமண்டபத்தில் இரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது, அதன்மீது வெண்மையான பட்டுவிரிப்பு போடப்பட்டிருந்தது. கண்ணாடி கூஜாக்கள், கோப்பைகள், இன்னும் பலவகையான பண்டமேந்தும் பாண்டங்கள் ஏராளமாக இருந்தன. சுற்றிலும் அமர்ந்துண்ணத் திண்டுகள் விரிக்கப் பெற்றிருந்தன. அந்த மண்டபத்தில் அடிக்கொரு அடிமைப்பெண் விதம் நின்று கொண்டிருந்தார்கள். அடிமைப்பெண்கள் என்று எளிதாகச் சொல்லி விட்டாலும் அவர்கள் அழகை அவ்வளவு சுலபத்தில் வருணிக்க முடியாது! பேரழகிகள் அவர்கள். அவர்கள் தங்கள் தோள்களில் மதுக் குடங்களைச் சுமந்து நின்றார்கள். வேறுசிலர் விசிறிகள் தாங்கி நின்றனர். மற்றும் சிலர் பீடாத்தட்டுகள் பிடித்து நின்றனர். இன்னும் சிலர் உக்காப் புகையைத் தயாராக்கிக் கொண்டிருந்தனர்.

மூவர்வந்தனர். அமர்ந்தனர்.

"ஸுராஜ் இது எனது சொந்த விருந்து. எனது உயிர் தப்புவித்த உனக்கு! மாலை மக்களின் முன்னால் நன்றியுரை, பிறகு......"


"இதெல்லாம் எனக்கு எதற்கு? என் கடமையைச் செய்தேன். அத்தோடு காலமும் ஒத்துழைத்தது"

ஸுராஜ் முறைப்படிக் கூற வேண்டிய உபசார வழக்கு வார்த்தைகளைச் சிதறினான். முடீனுக்கு மட்டும் அளவிறந்த மகிழ்ச்சி! தனது உயிர்த் தோழனுக்கு முகலாய பாதுஷா இத்துணைப் பரிவுடன் விருந்தும், வரவேற்பும் நடத்தினால் அதில் அவனுக்கும் பங்குண்டல்லவா? ஆகவே அவன் அந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில் பெருமை கொண்டான் அதன் முழு விபரமும தெரிய ஆவல் கொண்டான்.

"பிறகு......என்று நிறுத்தி விட்டீர்களே!"

"அதுவா? இரவு ரஜினியின் நாட்டியம் உண்டு"

இரஜினி—இந்தப் பெயர் ஸுராஜுவின் இதயத்தைக் குத்தி விட்டது போலும்! அவன் முகத்தில் இரத்தக் குமிழ்களின் கும்மாளம்! ஆம்! அந்தப் பெயரே அவனை அப்படி ஆட்டிவைத்ததென்றால்



அவனை நேரில் கண்டு விட்டான் என்ன செய்வான்? அவன் மனம் எத்தனை கோணங்களாக மாறித் தவிக்குமோ? யார் கண்டார்கள்! முடீனுக்கு மட்டும் அந்த ஆசை கிடையாதா? உண்டு, ஆனால் பெயர் கேட்டவுடன் பித்தனாகும் பேதமை நிச்சயமாக அவனிடம் கிடையாது. அவன் வாழ்விலோர் குறிக்கொள் கொண்டவன். அதற்கு இடையூறாகவரும் எதிலும் தலையிடுவதில்லை. தலையிட்டுத் தனது உயிர்த்திட்டத்திற்கு உபத்திரவத்தை வரவழைத்துக் கொள்வதில்லை.

மூவரும் பேசிக்கொண்டே விருந்தருந்தினர். இனிய உணவு, எல்லாம் இறைச்சி வகை! மதுவும் உண்டு! கேட்கவும் வேண்டுமா? பிறகு அவர்களை விருந்தினர் மண்டபத்திற்கு அனுப்பிவிட்டுப் பாதுஷா தனது தனியறையை நாடிச் சென்றான்.

ஸுராஜுவும், முடீன்கானும் ஒரேபாதையில் தான் நடந்து சென்று கொண்டிருந்தார்கள்.

ஆனால் இருவரும்வெவ்வேறு உலகில் சஞ்சரித்தார்கள்! இவன் எண்ணம் கட்டிய கோட்டையை இன்னொருவனது சிந்தனைக் கோட்டை கேலிபேசிக் கொண்டிருந்தது. ஸுராஜ் இரஜினியின் உருவத்தை எப்படி அமைத்து அழகு பார்க்கலாம் என்று எண்ணினான். அவளது அங்கங்களை எப்படி அமைத்தால் அழகு வழியும் என்று கற்பனை செய்தான். பிறகு ஒவ்வொன்றிற்கும் உதாரணங்கள் தேடிக் கொண்டிருந்தான். முடீனோ வங்காளத்திலே தனது நெஞ்சைச் செலுத்திக் கொண்டிருந்தான், அவனுக்கு ஏனோ ஒருவித சந்தேகமும், சஞ்சலமும் இருந்தவண்ணமே இருந்தன. அவனால் அதிலிருந்து தபபியிருக்க முடியவில்லை! அவனுக்கு உடனே திரும்பிப் போக வேண்டும் என்ற எண்ணம்! ஆனாலும் தன் நண்பனுக்கு ஏற்படும் பெருமைகளையும் கெடுத்து விடக்கூடாது என்று எண்ணியே இதுவரை ஊர் திரும்ப வேண்டிய செய்தியைப் பற்றி நினைவுகூடப் படுத்தவில்லை.

“ரஜினியை அவசியம் தனியாகச் சந்திக்க வேண்டும். அநேகமாக அந்த வணிகன் சோணியும் வருவான்”

“தோழனே, வங்கத்தின் நிலையை மறந்து விட்டாயா? சூழ்ச்சியின் வலை வீச்சால் கதறுகிறது தாயகம், நீ என்னடாவென்றால் நாட்டியராணியின் நட்புத் தேடுகிறாய்?”

“முடீன், என்னால் இந்த ஆசையை அடக்கமுடியாது!”

பிறகு அவர்கள் எதையும் பேசவில்லை. அமைதியாகவே நடந்து சென்றார்கள், அவர்களுக்கென்று அமைத்திருந்த விருந்தினர் மாளிகையில் நுழைந்தனர். அங்கு காவலிருந்த வீரன் தலையைத் தாழ்த்தி வணக்கஞ் செலுத்தினான். அவர்கள் மேலும் நடந்து சென்றனர். பணிப்பெண்கள் வந்து வரவேற்றனர். அறையினுள் நுழைந்தனர் எங்கும் நறுமணங்கமழ்ந்தது. ஒருத்தி வந்து உடைகளைத் தளர்த்தி

நீக்கவேண்டிய ஆடைகளைக் கழற்றி எடுத்துக்கொண்டு போனாள். இன்னொருத்தி மேலங்கி கொண்டுவந்து போர்த்தினாள். பிறகு ஒருத்தி மதுக்கோப்பையை நீட்டினாள். இன்னொரு புறத்தில் ஒருத்தி மதுரகானந் தந்து கொண்டிருந்தாள். ஒருத்தி அவளது குரலில் பட்டோடிவரும் தேனோசைக்கு ஏற்ப ஆடினாள்! இத்தகைய அருமையான அரசாங்க உபசரிப்பிடையே இருவரும் திணறித்தான் போயிருப்பார்கள். நல்ல காலமாக, அவர்கள் இத்தகைய விருந்துகளில் பழக்கமும், பயிற்சியுமுடையவர்களாகவே ஆச்சர்யத்தால் செப்புச் சிலைகளாகவில்லை!

கொஞ்சநேரம் ஆட்டத்தை அனுபவித்தார்கள். பிறகு எல்லோரும் அமைதியாககலைந்தார்கள். ஓய்விற்காகப் பஞ்சணைகளில் சாய்ந்தனர். அங்கேயும் ஆரணங்குகள் மயில் தோகை விசிறிகளால் காற்றை வரவழைத்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது ஒரு காவலாளி வந்து நின்றான்.

"தங்களை நாடி ஒருவர் வந்திருக்கிறார். வரலாமா?"

"இங்கு அழைத்துவா"

இருவரும் வருபவர் யார் என்று வழியின்மீது விழி வைத்துக் காத்திருந்தனர். என்ன ஆச்சரியம், சோணி வந்து கொண்டிருந்தான்!

(தொடரும்)





10. அடைக்கலம்

'நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்' — என்பது சிறந்ததொரு அனுபவ மொழி. அதற்கேற்பவே தான் கண்ணகியை யாரிடம் அடைக்கலமாக ஒப்படைக்கலாம் என்று கவுந்தி அடிகள் நினைத்தபோது ஆயர்குலத்து மாதரி என்பவள் அங்கு வந்தாள்.

மலர்போலும் விழியமைந்த 'இயக்கி' என்ற பெண் தெய்வத்திற்குப் பாற்சோறுபடைத்துத் திரும்பிய மாதரி கவுந்தி அடிகளைக் கண்டு கைகுவித்து வணங்கினாள். பசுக்களை நோயிடமிருந்து காத்துப் பசும் புல்லும் நன்னீரும் வைத்து அப்பசுவின் பயனை எல்லோர்க்கும் அளிக்கும் ஆயர்களுடைய வாழ்க்கையானது தீமையற்ற அறமுடையது. அத்தகைய அறமேற்கொண்டவள் மாதரி. அதனால் குற்றமற்றவள். ஆண்டினால் முதிர்ந்தவள். செம்மையான இதயப் பண்பும் இரக்கமுமுடையவள். எனவே கண்ணகியை மாதரியிடம் அடைக்கலமாக விடுவதே சாலச் சிறப்புடையதாகும் என்று கவுந்தி அடிகள் எண்ணினார்.

புறஞ்சிறை மூதூர்ப்
பூங்கண் இயக்கிக்குப்
பால்மடை கொடுத்துப்
பண்பிற் பெயர்வோள்
ஆயர் முதுமகள்
மாதரி என்போள்
காவுந்தியை ஐயைக்
கண்டடி தொழலும்
ஆகாத் தோம்பி
ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர்
கொடும்பா டில்லை
தீதிலள் முதுமகள்
செவ்வியள் அளியள்
மாதரி தன்னுடன்
மடந்தையை இருத்துதற்கு
ஏதம் இன்றென
எண்ணின ளாகி

இவ்வாறு எண்ணிய கவுந்தி அடிகள் மாதரியை நோக்கி 'இம் மடந்தையின் கணவனது

தந்தையின் பெயரைக் கேட்டால் இந்நகரத்து வணிகர் பெரும் பொருள் பெற்றது போல அக்மிக மகிழ்ந்து விருந்தாக இவர்களை வரவேற்று உபசரிப்பர். அவ்வாறு ஏற்கும் வரையில் இக் கண்ணகியைத் தக்க ஒருவர் காப்பில் வைக்கவேண்டும். எனவே உன்னிடமே இவளை, அடைக்கலமாகத் தருகின்றேன். கொள்க' என்று கூறினர்.

மாதரி கேளிம்
  மடந்தைதன் கணவன்
தாதையைக் கேட்கில்
  தன்குல வாணர்
அரும்பொருள் பெறுநரின்
  விருந்தெதிர் கொண்டு
கருந்தடங் கண்ணியொடு
  கடிமனைப் படுத்துவர்
உடைப்பெருஞ் செல்வர்
  மனைப்புகு மளவும்
இடைக்குல மடந்தைக்கு
  அடைக்கலம் தந்தேன்

கண்ணகி, கோவலனது உயர் குடிப்பிறப்பையும் கண்ணகியாரது உயர் தனிச் சிறப்பையும் நன்கறிந்த கவுந்தி அடிகள் அடைக்கலமாக அமர்த்தத் தகுதியான ஒருவரைத் தெரிந்து காண்பதில் மேற்கொண்ட கருத்துக்கள் முன்பே கூறப்பட்டன. அவற்றுள் மாதரியின் இயல்பனைத்தும் அலசி ஆராயப்பட்டன. மாதரி பிறந்தகுலம் எத்தகையது? செய்தொழில் என்ன? அவற்ருல் வரத்தக்க நலங்கள் எத்தகையன? என்று ஆராய்ந்து கண்ட வினக்களுக்கு அறியப்பட்ட விடைகளால் கவுந்திக்கு மன நிறைவு உண்டாயிற்று. இத்தகைய அடிப்படையான எண்ணங்களிலிருந்து மாதரியின் தனித்த பண்புகளைச் சீர்தூக்கி ஆராய்ந்த பிறகே கவுந்தி அடிகள் 'தீதிலள்' என்றும் 'முதுமகள்' என்றும் 'செவ்வியள' என்றும் 'அளியள்' என்றும் கூறுவாராயினர். வெறும சொல்லடுக்குகள் என்று பிறர் ஒதுக்கிவிடாத வண்ணம இவற்றின் பொருள் நுட்பங்கள் தோன்ற இளங்கோ வரிசைப்படுத்தி வழங்கியுள்ளார்.

ஒரு மனிதனைப்பற்றி அறிய விருமபுவோர் சுருக்கமாக முதலில் கேட்கும் கேள்வி 'அவன் நல்லவனு, கெட்டவனு?' என்பதே. இதற்கு விடை தருவோர் அவனது குணத்தையும, குற்றத்தையும் ஆராய்ந்து அவற்றுள் எது அளவால் மிகுதியாக இருக்கிறதோ அதையே கூறவேணடும. அத்தகையமுடிவுக்குக் கவுந்தி அடிகள் வரும்போது மாதரி 'தீதிலளாய்' எண்ணப்படுகிருள். அன்றியும் மாதரியின் பருவ முதிர்ச்சி, நிறைந்த வாழ்க்கை அனுபவம், உயர்ந்த மனப்பண்பு முதலியவற்ருலும் கண்ணகியை அடைக்கலமாகப் பெறத் தக்க சால்புடையவளாகிருள் மாதரி.

கொடுப்போர், பெறுவோர் தகுதியை உணர்ந்தோம். அடைக்கலமாகக் கொடுக்கப்படும் பொருளின் சிறப்பை நம்மிலும் மாதரி அறிய வேண்டிய கடப்பாடு உடையவளல்லவா? அதைத்தான் கவுந்தி அவளுக்கு இனிக் கூறுகிருர்.

....
  .... இங்கு
என்னெடு போந்த
  இளங்கொடி நங்கைதன்

வண்ணச் சீறடி
மண்மகள் அறிந்திலள்
கடுங்கதிர் வெம்மையில்
காதலன் தனக்கு
நடுங்கு துயர்எய்தி
நாப்புலர வாடித்
தன்துயர் காணாத்
தகைசால் பூங்கொடி
இன்துணை மகளிர்க்கு
இன்றி அமையாக்
கற்புக் கடம்பூண்ட
இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம்
யாம்கண் டிலமால்

"என்னெடு வந்த கண்ணகியின் அழகிய பாதங்களை நிலமகளும் அறிந்ததில்லை. சூரியனது கடுமையான வெப்பத்தால் வழியிடையே துயரடைந்த கணவன். அவன் பொருட்டு கண்டவர்களும் நடுங்கத் தக்க துன்பமடைந்தாள கண்ணகி. நாவும் உலரும்படியான சோர்வடைந்து தனது வழிநடைத் துன்பத்தைச் சிறிதும் உணராதவளாயினள். தம்மை மணந்த கணவரது இன்ப துன்பத்தில் துணையாகும் மகளிர்க்கு மிகவும் இன்றியமையாத கற்பாகிய கடமையை மேற்கொண்ட கண்ணகியாகிய இத்தெய்வமல்லாது பிறிதொரு தெய்வத்தை நான கண்டதில்லை" என்று கூறினர் கவுந்தி அடிகள்.

விடுவிட்டு வெளியே வந்தறியாத கண்ணகி நகர்விட்டு, நாடுவிட்டு, உற்ருர் உறவினரை எல்லாம் விட்டு வந்திருக்கிருள். ஏன்? எல்லாம் கொண்டகணவனின் பொருட்டாகத்தான். கண்ணகியின் மனத்திட்பத்தை இந்நிகழ்ச்சிகளில் நன்குநாம் காண்கிருேம்.

'கற்புக் கடம் பூண்ட இத்தெய்வமல்லது, பொறபுடைத் தெய்வம் யாம கண்டிலமால்' என்று பேசும் கவுந்தியோர் வாழவும் சபிக்கவும் வல்ல துறவி. இல்லறத்தில் இருக்கும் ஒரு இளம்பெண்ணைக் கற்புடைத் தெய்வமாய், கண் கண்ட தெய்வமாய் எண்ணிக் கூறிய சொற்களிலே எதிர்காலத்தைக் கவுந்தி உணர்ந்துள்ளமையை நாம் அறிகின்ருேம். அடைக்கலமாகத் தாப்படும் கண்ணகியின் உயர்வை மாதரி உணர்ந்துவிட்டால் அவளைக் காப்பதில் கண்ணுங் கருத்துமாய் இருப்பாளல்லவா! அதை உணர்ந்தும், எதிர்காலம் அதை முற்றிலும் உணர்த்தப் போவதை நினைந்தும் கவுந்தி இவ்வாறு பேசினள். இதன் பின்னர் இத்தகைய கண்ணகியை அவள் எவ்வாறு போற்றிப் பாதுகாக்கவேண்டுமென்பதைக் கூறுகிருர்.

மங்கல மடந்தையை
நல்நீர் ஆட்டி
செங்கயல் நெடுங்கண்
அஞ்சனம் தீட்டி
தேமென் கூந்தல்
சின்மலர் பெய்து
தூமடி உடிஇத்
தொல்லோர் சிறப்பின்
ஆயமும் காவலும்
ஆயிழை தனக்குத்

தாயும் நீயே
யாகித் தாங்கிங்கு

"கண்ணகியைத் தூயநீரால் குளிப்பாட்டி, கயல்போலும் நெடிய கண்களிலே மைஎழுதி கருநாகக் கூந்தலிலே வண்ண மலர் சூடி, சிறந்த ஆடை கொடுத்து, தாயாய், தஜ்னவளர்த்த செவிலியாய், தன்னரிய தோழியாயிருந்து நீ இவளைக் காப்பாற்றுவாயாக" என்கிறார் கவுந்தி.

கண்ணகியின் இளமையையும் அனுபவமற்ற இயல்பனைத்தையுமே இளங்கோ, கவுந்தி மூலமாய் இங்கே பேசுகிறார். நீராடுதல், மையிடுதல்; பூச்சூடுதல்; ஆடை அணிதல்—இத்தனை செயல்களுக்கும் கண்ணகி பிறர் உதவியை நாட வேண்டியவளாகவே இருக்கின்றாள் என்பதை ஆசிரியர் புலப்படுத்தக் காணுகிறோம்.

இனிக்கண்ணகியை அடைக்கலமாகப் பெறுவதால் வரத்தக்க நலத்தையும் கவுந்தி கூறுகிறார். அடைக்கலமாகத் தரப்படும் பொருளைப் பாதுகாப்பது எளிதாயினும் ஏற்படும இன்பமோ மிகுதியாகும்.

தவத்தோர் அடைக்கலம்
தான்சிறி தாயினும்
மிகப்பே ரின்பம்
தருமது கேளாய்

என்று கூறிய கவுந்தி அடிகள் இதனை வலியுறுத்தத் தேவனொருவனது வரலாற்றை எடுத்துக் கூறித் தன் கண்ணினும் அருமையாய்க் கண்ணகியைக் காத்து வருமாறுகூறி வாழ்த்தி வழியனுப்புகிறார்.

பருவத்தின் மலர்ச்சியைக் காட்டும் மார்பகம், பசுமையான மூங்கிலைப் போன்ற தோள்; நாணல் முளைபோன்ற வெண்மயமான பற்கள்; — இத்தகைய இயற்கையோடு பிறந்த அழகும், நிறைந்த அறிவும் பொருந்திய கண்ணகியைக் கோவலனோடு அழைத்துக் கொண்டு மாதரிவழிநடந்தாள்.

கண்ணகியின் அழகுநலங்களை இளங்கோ இவ்வாறு இங்கு பேசுதற்கு ஒரு காரணமுண்டு. வழிநெடுகிலும், தெரு மருங்கிலும் செல்லும பெண்டிர் கண்ணகியின் கன்னிளமைத்திறத்தில் வியப்படைந்து பின் தொடர்ந்தமைபற்றியே இவ்வாறு பேசப்பட்டது.

பொழுது சாய்கின்ற மாலைப் பொழுதிலே தாய்ப் பசுக்கள் தம் கன்றுகளை நினைந்து 'அம்மா' என்று குரல் எழுப்பி வந்தன. அவைகளை மேய்த்து வரும் ஆயர்கள் குழல் ஊதி வந்தனர். ஆட்டிடையர் ஒரு தோளில் செம்மறிக் குட்டியையும், மறு தோளில் கோடரியையும் சுமந்துவர இடைச்சியர் பின் தொடர்ந்தனர்.

வளரிள வனமுலை
வாங்கமைப் பணைத்தோள்
முளையிள வெண்பல்
முதுக்குறை நங்கையொடு
சென்ற ஞாயிற்றுச்
செல்சுடர் அமையத்துக்
கன்றுதேர் ஆவின்
கனைகுரல் இயம்ப
மறித்தோள் நவியத்து
உறிக்கா வாளரொடு
செறிவளை ஆய்ச்சியர்
சிலர்புறம் சூழ

கண்ணகி மாதரியோடு வருகிறாள். ஊருக்குப் புதியவராகவும், அழகுக்கு ஒரு எடுத்துக்காட்டாகவுமிருக்கும் இருவரையும் ஆயர்கள் வியப்பொடு பார்த்துச் சூழ்ந்துவருவது அரிய காட்சியாகும். ○

மதிப்புரை: டாக்டர் மு. வரதராசனுர்

இந்தியாவின் மொழிச் சிக்கல்

INDIA'S LANGUAGE PROBLEM
ஆசிரியர்: கா. அப்பாத்துரை, M.A., L.T., விசாரத் (ஹிந்தி)
பக்கம்: 216 விலை: ரூ. 2-8-0

இது தமிழின் சிறப்பை விளக்கும் ஆங்கில நூல். ஆனுல் தமிழின் சிறப்பை விளக்க வேண்டும் என்பதே நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டது அல்ல. இந்தியாவில் உள்ள மொழிகளைப் பற்றி நடுநிலையாக ஆராயும் முயற்சியின் விளைவாகத் தமிழின் சிறப்புத் தானே விளங்குமாறு நூல் எழுதப்பட்டிருக்கின்றது. நூலின் ஆசிரியர் பலமொழிகளையும் கற்றுத் தேர்ந்தவர்; சிறப்பாகத் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் பட்டம் பெற்றவர்; ஆகவே இத்தகைய நூலை எழுதுவதற்கு முற்றிலும் தகுதி யுடையவர். சைதாப்பேட்டை திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக் கழகத்தாரின் சார்பாகத் தமிழ் இந்தியா பதிப்பகத்தார் வெளியிட்டுள்ள இந்த நூல், தமிழ் மொழிப் படை வீரராகப் பலியான தாலமுத்து நடராசன் நினைவாக வெளிவருவதும் மிகப் பொருத்தமே ஆகும்.

தமிழ் மொழியின் சிறப்பை நாடறிய விளக்கி, பழந்தமிழ் இலக்கியத்தின் பெருமையை உயர்ந்த வகையில் புலப்படுத்தித் தமிழ்த் தொண்டு ஆற்றி வரும் பெரியார் உயர்திரு. மறைமலையடிகள் விரிவான முன்னுரை அளித்து அணி செய்துள்ளார்கள். அதில் உலகத்தில் முதல் முதல் மக்கள் தோன்றி வாழ்ந்த நாடு தமிழகமே என்றும், முதல் முதல் மக்களுக்குரிய மொழியாக இருந்தது தமிழ்மொழியே என்றும், இன்னும் பலவகையாலும் சிறப்புப் பெற்றுப் பொது மொழியாவதற்கு உரிய தாய் விளங்குவது தமிழே என்றும் நிறுவியுள்ளார்கள்.

ஆசிரியர் தொடக்கத்திலேயே இந்தியாவின் நிலைமையை நன்கு ஆராய்கினறுர். பல மொழி, பல சமயம், பல இனம் எனப் பிரிந்துள்ள மக்களை ஒரு நாட்டு மக்கள் எனக் குறிப்பிடுவது பொருந்தாதெனக் காட்டுகின்றுர். ஆகையால் இந்தியாவை ஒரு நாடு என்று கூறுவதைவிடப் பல நாடுகளின் தொகுதி என்று கூறத்தகும். சமயம்

இனம் என்ற காரணங்களைவிட மொழி என்பது மக்களைப் பிரித்துள்ள வகையை மறக்க முடியாது. மற்றப் பிரிவுகளுக்கும் அது அடிப்படையாக அமைந்துள்ளது. இந்தப் பிரிவுகளை ஒன்றுபடுத்த முனையும் அரசியல் தலைவர்கள் நாட்டு மொழி, தேசியமொழி, அரசியல் மொழி, பொது மொழி என்ற பல பெயர்களைச் சொல்லிவருகின்றனர். இவற்றில் தெளிவு இல்லாத காரணத்தால் குழப்பமே மிகுதியாகின்றது. ஆகையால் ஆசிரியர் முதலில் இந்தத் தொடர்களை விளக்கி மேற்செல்லுகின்றார். தாய்மொழிக்கும் பிரதேச மொழிக்கும் உள்ள வேறுபாட்டையும் தெளிவுபடுத்துகின்றார். மொழிவாரி மாகாணங்களைப் பிரிப்பதால் இந்த வேறுபாட்டைக் குறைத்துச் சிக்கலையும் தீர்க்க முடியுமெனத் தேசபந்து சி.ஆர். தாஸ் 1920ல் கொண்ட கருத்து மிகச் சிறந்தது. காந்தியடிகளும் அதனை உடன்பட்டார். 1922ல் காங்கிரஸும் அதனை ஒப்புக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால் இன்றுவரையில் அதைச் செயல் முறையில் கொண்டு வந்து மொழிவாரி மாகாணப் பிரிவினை செய்யாத காரணத்தால், மொழித் தொல்லை மிகுந்து நாட்டில் பிரிவுகளும் பிணக்குகளும் பெருகிவிட்டன. அதனால் இன்றுள்ள தலைவர்கள் வடமொழியைப் பற்றியும் ஹிந்தி மொழியைப் பற்றியும் வற்புறுத்திப் பேசும்போதெல்லாம் நாட்டு மொழி அரசியல்



கா. அப்பாத்துரை

மொழி எனப் பலவாறுபேசிக் குழப்புகின்றனர். அந்தந்த மாகாணங்கள் அந்தந்த மாகாண மொழியில் அரசியலை நடத்துமானால், இத்தனை வகையான தொடர்களும் சிக்கல்களும் தீரும். ஹிந்தியோ மற்ற எதுவோ நாட்டு மொழியாகவும் ஆக முடியாது, அரசியல் மொழியாகவும் விளங்க முடியாது என்பதையும் உணரலாம் (பக்கம் 21). இன்று வேண்டியது பொதுமொழி; அதுவும் பல மாகாணங்களும் தமக்குள்ளும் வெளிநாடுகளுடனும் உறவு வைத்துக்கொள்வதற்காகவே அல்லாமல், நாட்டு அரசியலை நடத்துவதற்காக அல்ல; இத்தகைய தெளிவு இல்லாமல் பொது மொழியைப் பற்றிப் பேசுவது பயனில்லை என வற்புறுத்துகிறார் ஆசிரியர்.

அத்தகைய பொது மொழி எதுவாக இருக்க முடியும் என்பதையும் விரிவாக ஆராய்கின்றார். பல வினாக்களைத் தாமே எழுப்பிக்கொண்டு அவற்றிற்கு விடை காண முயல்கின்றார் (பக்கம் 18). ஹிந்தியைப் பொதுமொழியாகக் கொள்வதால் நாட்டில் ஒற்றுமையை நிலைநாட்டி விடலாம் என்பது வெறுங் கனவு (பக்கம் 23). அதனால் பிரிவுணர்ச்சி குறைவதற்கு மாறாக மிகுதிப்படலாம் என்பதைப் பாகிஸ்தான் பிரிவினை காட்டிவிட்டது (பக்கம் 39). பல மொழிகளையும் சிறுவர்கள் படிப்பது நல்லது என்று பொறுப்புள்ளவர்கள்

கூறுவது பெரும் பிழை (பக்கம் 24); மொழிநூலறிஞர்கள் வேண்டுமானால் அந்தக் கருத்தின்படி பல மொழிகளையும் படிக்கலாமே தவிர, இளம் பிள்ளைகளின்மேல் இத்தகைய பெருஞ் சுமையைச் சுமத்துவது கல்வி முறையில் செய்யப்படும் பெருங் குற்றமாகும்.

ஆங்கிலமே இந்தியாவின் பொதுமொழியாக விளங்கமுடியாதா என்பதும் இங்கு ஆராயப்படுகின்றது. அதனால் விளையக் கூடிய நன்மைகளை ஆசிரியர் மறக்கவில்லை (பக்கம் 26); ஆனால் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அது எவ்வளவு இடையூறான கொள்கை என்பதை அவர் விளக்கும்போது (பக்கம் 28, 170) அவருடைய நடு நிலையான போக்குத் தெளிவாகின்றது. ஆங்கில மொழி இந்திய நாட்டு மொழிகளின் அமைப்புக்கு வேறுபட்டது என்றும், இந்தியர்கள் கற்பதற்கு எளியது அல்ல என்றும், இந்தியப் பொது மக்களின் வாழ்க்கையிலிருந்து சிலரைப் பிரித்து ஒதுக்க வல்லதே அல்லாமல் பிணைக்க வல்லது அல்ல என்றும் பல சிறந்த காரணங்கள் எடுத்துக் கூறப்படுகின்றன. ஆங்கிலம் உலகப் பொது மொழியாகையால் இந்தியாவுக்கும் பொது மொழியாக இருக்கலாம் என்பதும் அவருக்கு உடன்பாடு அல்ல; எதிர்காலத்து உலக அரசியலில் நேரும் மாறுதலால் ஆங்கில மொழியின் செல்வாக்கும் மாறக்கூடும் என்கின்றார் (பக்கம் 30, 31).

அடுத்தபடியாக, வடமொழி ஏன் பொதுமொழி ஆக முடியாது எனக் காட்டுகின்றார். அது அரசியல் தவிர மற்றத் துறைகளில் ஓரளவு பொது மொழி என்னுமாறு இடைக்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்ததையும் வரலாற்று முறையில் எடுத்துரைக்கின்றார்! ஆனால் இக்காலத்திற்கு ஏற்ற இலக்கிய வளர்ச்சியும் கருத்து வளமும் பெருத் பேச்சு வழக்கற்ற ஒரு மொழியை நாட்டின் பொது மொழியாக்க வேண்டும் என்று கண்மூடித் தன்மையாகப்பேசி வருவோர் சிலர் இருப்பதால் ஆசிரியர் இதையும் ஆராய்ந்து கூற நேர்ந்தது. இல்லையானல், வட மொழியை இங்கு ஆராயவேண்டிய காரணமே இல்லை என்று விடலாம்.

இனி எது பொதுமொழி ஆகத் தகுந்தது என்பதைப் பல காரணங்களை (பக்கம் 74) வகுத்துக்கொண்டு ஆராயப் புகுகின்றார், தமிழுக்கு எல்லாப் பொருத்தமும் அமைந்திருப்பதை எடுத்துக் காட்டுகின்றார். தமிழ் மொழியினிடம் சமயப் பிணக்கைக் கடந்த பரந்த நோக்கமும், பலர்க்கும் பலவகைக் கருத்துக்களுக்கும் இடந்தரும பொதுநோக்கமும், பிறமொழிகளின் வளர்ச்சியைத் தடைப்படுத்தாத பெருந் தன்மையும் காலத்திற்கேற்ற முற்போக்கான வளர்ச்சியும், பழமையில் பண்பட்ட இலக்கியச் செல்வமும், புதுமையில் சிறந்த புலவர்களின் கலைவளமும், பிறவற்றின் தாக்குதலுக்கு இரையாகாத திண்மையும் முதலான எல்லாச் சிறப்புக்களும் இருக்கின்றன. ஆனால் இத்தனைச் சிறப்புக்களையும் பெற்றிருந்தும், தமிழைப்பற்றி ஆசிரியர் எண்ணுவதுபோல் எண்ணு

வோர் யார்? ஒரு சிலரே எனக் கூறவேண்டும். காரணம் இந்தியாவின் அரசியலில் தமிழரின் குரல் கேட்கப்படாததேயாகும். பக்கத்து நாட்டாராகிய தெலுங்கரும 'தமிழ் பொதுமொழியாக வல்லது' என்னும் கருத்தைக் கேட்கப் பொறார்; தமிழராகவே வரலாற்றில் வளர்ந்துவந்த மலையாளிகளும் பொறார்; அவ்வாறிருக்கும்போது, வடநாட்டு அரசியல் தலைவர்களின் செவி இதைக் கேட்கவில்லையே என்று வருந்துவதில் பயன் என்ன? தவிர, ஆசிரியர் எண்ணுவது போல் (பக்கம் 172) மக்களின் வரலாற்றையும் பண்பாட்டையும் அடிப்படையாகக்கொண்டு அரசியலை அமைப்போர் யார் உள்ளனர்? அவர் எண்ணுவதுபோல் அரசியலில் உண்மையே வெற்றிபெறுகின்றதா? பெரும்பான்மையான மக்களின் தேவையை ஒட்டி வாக்களித்தலும், வாக்களித்தலை ஒட்டி அரசியல் அமைதலும் உள்ள மக்களாட்சியில், மக்கள் எல்லோரும் அறிஞரானால் தவிர, இதற்கு வழி இல்லை.

வரலாறு, அரசியல் முதலிய துறைகளில் இந்நூல் விளக்கங்கள் செய்திருந்தபோதிலும் மொழிநூல் துறையில் மிகப் பயன்படுவதாக உள்ளது. இந்திய மொழிகளுள் அமைந்துள்ள, பொதுப் பண்புகள், வடமொழிக்கும் தமிழுக்கும உள்ள உறவு, வடஇந்திய மொழிகளுக்கும் தமிழுக்கும் உள்ள உறவு (பக்கம் 112-128) இவற்றை ஆசிரியர் விளக்கும்போது அவருடைய அரிய உழைப்புப் புலனாகின்றது. சந்தி யிலக்கணத்தின் காரணத்தைப் பற்றிக் கூறும் கருத்து (பக்கம் 119) பொருந்துவதாகக் கொள்வதற்கில்லை. செவி வாயிலாகப் பெரிதும் அறிவை வளர்த்த காலத்துப் பழைய மொழிகளின் இயல்பு என அதை விடுவது நலம். வடமொழியாளர் தமிழ்ச்சொற்களைப் பொருளறியாமல் மொழிபெயர்த்துக் குழப்பியுள்ளதை ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். தாய்மொழியின் மூலம் கல்விகற்பிக்கவேண்டும் என்று முயல்பவர் ஆசிரியர் கூறும் குறைகளை அறிந்து நீக்க முயல்வாரானால் நாடு எவ்வளவோ நலம் பெறும்.

இறுதியில் வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் இன்றுள்ள பலவேறு அரசியல் கட்சிகளையும் பாகுபாடு செய்து ஆராயும் பகுதி அறிவுக்கு விருந்தாகும். காந்தியடிகள் முதல் இந்தியக்கல்வியமைச்சர் மௌலானா ஆசாத் வரையில் சிலர் மொழிச்சிக்கல் பற்றி கூறிய கருத்துக்களையும் சீர் தூக்கிப் பார்க்கின்றார். முடிவுரையாக, இந்தியாவிற்கு வேண்டுவது அரசியல் மொழியன்று, ஒரு பொது மொழி. ஒரு மொழி பெயர்ப்புக்கழகம் என்பதை வற்புறுத்துகின்றார்.

இந்நூல் தமிழ் மக்களிடம் விளங்குவதைவிட, மற்றநாட்டு மக்களிடம் பரவி உண்மை உணர்த்தினால் பெரும் பயன் உடையதாகும்; சிறப்பாக ஆந்திரம் முதலான தென்னாடுகளின் அரசியல் தலைவர்களும் வடநாட்டு அரசியல் தலைவர்களும் இதைக் கற்பார்களானால், நல்ல மனமாறுதலாவது ஏற்படும். ஆகையால் இதை ஆசிரியர் ஆங்கிலத்தில் எழுதியது பாராட்டத்தக்கதாகும்.

கண்டேன் இலங்கையை!

ஏ. பி. சனுர்த்தனம்

1946-ம் ஆண்டின் குடிக் கணக்குப்படி இலங்கையில் சுமார் 42,88 000 பௌத்தர்களும், 1,36.000 இந்துக்களும், 606,000 கிருஸ்துவர்களும், 4,33,000 முஸ்லீம்களும் உள்ளனர்.

சிங்களவர்களில் பெரும்பான்மையோர் பௌத்தர்களே. பாலி மொழியில் உள்ள "மகாவமிசம்" என்ற உண்மையும் கதையும் கலந்த நூல் புத்த மதத்தின் வளர்ச்சியைப் பற்றிக் கூறுகிறது. சுமார் 2300 ஆண்டுகளின் வரலாற்றை இது நமக்கு ஒருவாறு தெரிவிக்கின்றது. "அசோகர்" காலத்தில் இலங்கையில் கால் வைத்த இம்மதம் அந்நாட்டு மக்களின் நாகரிகம், வாழ்வியல், கலை, ஆகியவற்றை ஒருவாறு உருப்பெறச் செய்துள்ளது.

புத்த மதத்தைப் போற்றிப் பேணி வளர்த்த சிங்கள மன்னர்களை மகாவமிசம் நமக்கு அறிமுகப் படுத்துகிறது. சிங்களமெங்கும் சிதறியுள்ள சிறந்த கோவில்களும், மடங்களும், கல்வெட்டுகளும் இந்த மன்னர்களின் மதப்பற்றைப் பறைசாற்றுகின்றன. மதப்பற்று மக்களை மறக்க வைத்தது—சில மன்னர்களிடத்திலே. புத்த பிக்ஷுகளிடம் நாட்டை ஒப்புவித்துத் துறவறம் பூண்ட மன்னர்களும் உண்டு. மதப்பற்றின் எல்லையைக் கீழ்க் கண்ட வரலாறு காட்டுகிறது. சிறுவயதில் பிக்ஷுக்குப் பகிர்ந்தளிக்காமல் ஒரு மிளகாயைத் தின்றாராம் ஓர் மன்னர். ஆட்சிக்கு வந்ததும் இது நினைவிற்கு வரவே உள்ளம் பதை பதைத்தார். பாபத்தைப் போக்கக் கழுவாய் தேடினார். "மிரிசுவேத்தியா" என்றபெரும் கோவில் கட்டினார் 'மிளகாய்' பாபத்தை போக்க. மதப்பற்றுக்கு ஓர் காரசாரமான சாம்பிள்!

"அனுராதபுரம்," "போலனார்றுவ," "சிகிரியா," "தம்புல்லா" ஆகியவை பௌத்த மதம் தழைத்தோங்கும் தலங்கள். அனுராதபுரத்தில் "தூபுராமா," "ரூவான்வெலி" 'சாயா'

ஆகிய இருபெரும் கோவில்கள் உள்ளன. அவை இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன்னரே கட்டப்பட்டவை. புத்தருக்குப் போதி மரத்தின் அடியில் சிறந்த நெறி தோன்றியதாகவும், அந்த மரத்தின் ஓர் கிளை அனுராதபுரத்திற்குக் கொண்டு வரப்பட்டதாகவும் வரலாறு. அந்தக் கிளை உலகிலேயே மிகப் பழைய மரக்கிளையாம். பட்டுவிடும் என்ற பயத்தால் சில ஆண்டுகளுக்கு முன்பு அதற்கு 'ஊசி' போடப்பட்டது. புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் அனுராதபுரத்திலும், அதைச்சுற்றிலும், பல புத்தர் சிலைகள், கோவில்கள், ஆகியவைகளைக் கண்டெடுக்கினறனர். காலம் போகப் போகப் பல அதிசயப்பொருள்களைத் தோண்டி எடுப்பர்!

"போலனர்ருவை" கொஞ்ச காலம் சிங்களவர்களின் தலைநகராயிருந்தது. அங்கும் பல நூற்றுக்கணக்கான சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அங்கே 60 அடி உயரமுள்ள பெரிய புத்தரின் சிலையைக் காணலாம். சில சிவாலயங்களும் உள்ளன, சிதைந்த நிலையில்.

"சிகிரியா" சிங்களத்தின் அஜந்தா. புத்தர் வாழ்க்கையைச் சித்தரிக்கும் அழகு நிறைந்த அந்த ஓவியங்கள் உயிருள்ள உருவங்களெனக் காட்சியளிக்கின்றன. "தம்புல்லாவில்" குகைக் கோவில்கள் உள்ளன.

"கண்டியில்" புத்தரின் பற்கோவில் உள்ளது. சிறந்த கற்கள் பதித்த பேழையில்



புரூப்ரீடர்: என்னய்யா, 'நொண்டி'க்கு 'நெண்டி'ன்னு போட்டிருக்கு? கால் எங்கே?

கம்பாசிட்டர்: நொண்டிக்குக் கால் ஏதுங்க?

புத்தரின் பல் இருக்கிறதாம். ஆண்டுதோறும் பல நூற்றுக் கணக்கான யானைகள் வலம் வர, அந்தப் பல்லைச் சிறந்த முறையில் ஊர்வலமாக எடுத்துச் செல்வராம். இந்தப் பல்லுக்காகப் பல களங்களில் போர் நடந்ததாக வரலாறு உண்டு. கொழும்புக் கருகில் "களனி" கோவில் உள்ளது. சிகிரியா, பற்கோவில், கன்னி கோவில், ஆகியவற்றின் படங்களைச் சிங்கள அஞ்சல் தலைகளில் காணலாம்.

மஞ்சள் ஆடையும், கையில் திருவோடும், உடைய புத்த பிக்ஷுகளை நாடெங்கும் காணலாம். பாலிமொழியிலுள்ள புத்தமத நூல்களைப் பயில்வதும், ஆங்காங்கு பள்ளிகளில் பிள்ளைகளுக்குக் கல்வி பயிற்றுவித்தலும் இவர்களின் வேலைகள்.

நடைமுறையில் பல சிங்களவர்கள் புத்தரின் அருள் நெறியைப் பின்பற்றுவதாகத்

தோன்றவில்லை. ஏனெனில், அன்பு மதத்தைச் சார்ந்த இந்த நாட்டில் கொலைகளுக்கும், வழக்குகளுக்கும் பஞ்சமில்லை!

அடுத்தது சைவ சமயம். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திரிகோணமலைப் பகுதிகளில் தமிழரனைவரும் சைவ மதத்தினர். கோவில்களுக்குத் திருவிழாக்களுக்கும் பஞ்சமில்லை. திருக்கோணீச்வரம், சிவனடிபாதம், கதிர்காமம் ஆகியவை பெரிய தலங்கள்! தீண்டாமை மிகக் கொடிய உருவில் உள்ளதாக எனக்குச் சொன்னார்கள். பகுத்தறிவுக் கொள்கை பரவப் பெருந்தடையாயிருப்பது சமய வெறி. வீரச்சைவரின் சிற்றத்தை நேரில் கண்டேன். ஆயினும், பெரியாரின் தொண்டர்கள், அங்கும் மூடநம்பிக்கையை முறியடிக்கும் முகாமை ஏற்படுத்தியுள்ளனர். திராவிடத்தினின்றும் வீசும் பகுத்தறிவுக் காற்று பலன் தந்துவருகிறது.



முதல் பரதேசி: சாமி! எங்கேயிருந்து வருது?

இரண்டாம் பரதேசி: பழனியிலிருந்து, நீங்க?

முதல்வர்: திருப்பதியிலிருந்து.

வாழ்க நம் இளைஞர்கள்! வெல்க அவர்களது முயற்சி!.

போர்த்துக்கீசியரும், டச்சுக்காரரும், ஆங்கிலேயரும், கிருஸ்து மதத்தைப் பரப்ப அரும்பாடு பட்டுள்ளனர். பல சிறந்த கல்லூரிகளை அமைத்துள்ளனர். கத்தோலிக்கர் தொகைதான் அதிகம்.

இஸ்லாமியர் இனப்பற்று மிக்கவராய் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர்.

சிங்களத்தின் பெரிய மலை உச்சிக்கு ஆதாம் சிகரம் என்பது ஆங்கிலப் பெயர். அங்கு கருங்கல்லில் இரு கால் சுவடுகள் செதுக்கப் பட்டுள்ளன. கிருஸ்துவர்களுக்கோ அவை ஆதி மனிதன் ஆதாமின் அடிச்சுவடுகள்! சைவர்களுக்கோ சிவனாரின் பாதங்கள்! எனவே சிவனடிபாதம் என்றுபெயர்! புத்தர்களுக்கோ, அருள் நெறி காட்டிய அண்ணலின் அடிச் சுவடுகள்! இப்படி பல மதத்தினர், பல்லாயிரவர்! அந்த மலை உச்சிக்கு யாத்திரை செல்கின்றனர்.

இங்குபோல் அவ்வளவு மதப் பூசல்கள் அங்கில்லை. சிங்களத்தில் எல்லா மதத்தினரும் தமது கொள்கைகளைப் பரப்ப உரிமை பெற்றுள்ளனர்.

சுயமரியாதை இயக்கம் குழவிப் பருவத்திலுள்ளது. தீண்டாமை, சமயவெறி. இவை இரண்டையும் நீக்கிய குறள் நெறியைச்சிங்களத்துக்குச் சீரிய வழிகாட்டியாய்த் தருகிறோம். உலக ஓட்டத்தில் அறிவியக்கம் அங்கும் வளர்ந்தே தீரும்.

வளரும் இலக்கியம்

புரட்சி இலக்கியம்

இன்றைய இலக்கியங்களைப் பற்றிய ஒரு தெளிவான ஆராய்ச்சியாக இருக்கும் இந்நூல் இலக்கிய உலகில் நாறிக் கிடக்கும். அழுகிய கற்பனைகளை அகற்றி, புரட்சி இலக்கியங்களை அரியணையேற்றவேண்டிய இன்றியமையாமையை எடுத்துக்கூறுகிறது. இன்று ஒவ்வொரு நாட்டிலும் இலங்கும் புரட்சி யிலக்கியங்களை எடுத்துக் காட்டி எழுத்தாளர்கள் செல்லவேண்டிய வழியையும் கூறுகிறது. கருத்தோட்டமுள்ள நடை. ஆசிரியர் சாமி பழனியப்பன். எரிமலைப் பதிப்பகம், துறையூர், திருச்சி. விலை 3 அணா.

தமிழ்த் தென்றல்

1949-ஆண்டு மலர் கிடைக்கப் பெற்றோம். ஓமாந்தூர் ராமசாமி ரெட்டியார், கி. ஆ. பெ. விசுவநாதம், நாவலர் பாரதியார், நல்லை அ. இளங்கோவன் ஆகியோரின் சொல்லோவியங்களால் மலர் சிறப்புப் பெறுகிறது. ஒரே நிறத்தில் அச்சிட்டு அட்டையில் அழகைக் கூத்தாடச் செய்யும் ஆற்றல் வாய்ந்த இந்நாளில் இரண்டு நிறத்தில் அச்சிட்டும் அட்டை எழிலின்றியிருப்பது படிக்கும் ஆர்வத்தை குறைப்பதாகிறது. விலை ரூ. 1—4—0 ஆசிரியர் வே. வ. இராமசாமி, விருதுநகர்.

பாரியைக் கொன்றவர் யார்?

மூவேந்தரும் பாரியின் பறம்பைப் பன்னாள் முற்றுகையிட்டும் வெல்லமாட்டாராயினர். கபிலர் அவர்களை நோக்கி, நீங்கள் ஆடிப்பாடிச் சென்று இரப்பீர்களானால், நாடுங் குன்றும் ஒருங்கு தருவான் என்றும், அவனையே பெறலாமென்றும் கூறிப்பாடினார். அவர்கள் பாரியிடம் அவனையே இரந்து பின் கொலை செய்தனர் என்பது நாட்டில் வழங்கி வரும் கதை. "அவனைப் பெறும் வழியைக் கூறியதால் கபிலர் அவனைக் கொல்லவழி சொல்லியவர் ஆகிறார். ஆகவே அவரே பாரியைக் கொன்றவர் ஆவார்" என்று ஆசிரியர் முடிவு கூறுகிறார். இதுபோலவே 'கபிலர் அந்தணரா?' என்ற கட்டுரையிலும் ஆசிரியரின் 'குறும்புப் புலமை'யைக் காணலாம். புலவர்கள் ஓய்வு நேரத்தில் நகைச்சுவைத் துணுக்குகளைப் படிப்பதுபோல் படித்து மகிழலாம். பதின்மூன்று கட்டுரைகள் அடங்கிய இந்நூலின் நடை சிறிது கடுமையானதுதான்! 'ஔவையாருக்கும் கொடைமடம் தக்கதன்று என்றல் கருத்தின்மை

யறியலாம்' என்பதுபோன்ற சொற்றொடர்களின் பொருள் என்னவென்பது புரியவில்லை. ஆசிரியர்: வித்வான் ஆ. சிவலிங்கனார். ஒற்றுமை ஆபீஸ், தியாகராயநகர், சென்னை. விலை ரூ. 1.

பெண் மனம்

பெண் மனம் எப்படிப்பட்டது என்று சிலர் கேட்டுக்கொண்டிருக்கிறார்களல்லவா, அவர்களுக்கு விடையளிப்பது போல் இக் கதையை 'லக்ஷ்மி' என்பவர் எழுதியிருக்கிறார். இவ்வாசிரியர் காட்டும் பெண்களில் ஒருத்தி தன் தலைவன் உயர்ந்தவன் என்று கருதிக்கொண்டிருந்து, தன்னை மணக்குமுன் வேறொருத்தியோடு கூட்டுறவு வைத்திருந்தான் என்று அறிந்ததும், உள்ளமுடைந்து அவனை விட்டு நீங்கியிருக்கிறாள். இன்னொருத்தி, குடிகாரன், காவாலி என்று தானறிய ஊரார் தூற்றும் ஒருவனைக் காதலித்து மணம் செய்துகொள்ளுகிறாள்.

பிறிதொருத்தியாகிய கதைத் தலைவி, தன் வாழ்வையே கெடுக்கப் பிறந்த ஒருவனை ஊரறிந்த குடி வெறியனை, தன் பெற்றோர், தம்பி ஆகியோர் தன்னலத்தால் அவளை அவனுக்குமணமுடிக்க விரும்புவதை யறிந்தும் மணம் செய்துகொள்ளுகிறாள். தவறான முறையில் அவளைக் கெடுக்க முயற்சித்த அந்த வெறியன் அவளையே மணந்த பிறகு, அவளிடம நெருங்காமலே இருந்துவிடுகிறானாம். இப்படி ஒரு விந்தையான ஆண் மனத்தையும் கதைபாசிரியர் படைத்துக்காட்டுகிறார். தன்னைக்கெடுத்தவனிடமும் ஏதோ கவர்ச்சியிருப்பதாக அந்தப் பெண் மனம் பிறகு எண்ணத் தொடங்குகிறதாம். ஆசிரியர் இயற்கையையே தலைகீழாக்கிவிட்டார் தம் அற்புதப் பேனா முனையால்! ஆசிரியர் மேற்கொண்டு சில பெண்களை-கதைக்குத் தேவையில்லாத வயலெட் மேகநாதன்போன்ற வாயாடிகளை வேறு இடையிடையே (பெண்மனத்திற்கு எடுத்துக்காட்டாகவோ, என்னவோ) கொண்டுவந்து அரட்டையடிக்க விடுவது விரசமாக மட்டுமல்ல, கதைப் போக்கின் வேகத்தைக்குறைப்பதாகவும் இருக்கிறது. கணக்கின்றிக் கலந்திருக்கும் பிறமொழிச் சொற்கள் புத்தகத்திற்குக் க்றை சேர்க்கின்றன. விலை ரூ. 2—4—0. சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை 14.

செல்வம்

செல்வமே எல்லாம் வல்லது, செல்வம் உள்ளவன் எதையும் செய்யலாம், செல்வத்தால் ஆகாததொன்றில்லை என்பது போன்ற கருத்துக்கள் படித்தவர், பாமரர் அனைவர் உள்ளத்திலும் குடியேறிப் போய்விட்டன. ஆனால் இது எவ்வளவு தவறான கருத்து? மனிதன் தன் வசதிக்காகப்படைத்துக்கொண்ட செல்வம் அவனையே ஆட்டிப் படைப்பதா? வேடிக்கைதான். செல்வம் என்றால் என்ன? அதை அரசாங்கம் எப்படிக் கட்டுப்படுத்துகிறது. நாணயச் செலாவணியின் பயன் என்ன? என்பது போன்ற சிறுசிறுகேள்வி

களுக்கு இப்புத்தகம் தெளிவுரை கூறுகிறது. இப்புத்தகத்தைப்பொருளாதார வரிச்சுவடி என்று கூறலாம். ஆசிரியர் க. சந்தானம். விலை ரூ 1-8-0. இதுவும சக்தி வெளியீடே.

எல்லோரும் இன்புற்றிருக்க ஜெயப்பிரகாஷ்

கம்பன் பாடல்களை வைத்துககொண்டு கருத்துரை சொல்வதுபோல ஏழெட்டுப் பக்கத்திறகுக் கட்டுரையை இழுத்து நிறுத்தும் பண்டிதர்களைப்போல, ஜெயப்பிரகாஷ் கருத்துக்களை வைத்துக்கொண்டு இப்புத்தகத்தை எழுதி முடித்திருக்கிறார் இதன ஆசிரியர். ஜெயபபிரகாஷின் கொள்கைகளைப பரபபவ் பூந்த புத்தகம் இது. ஆசிரியர் கையாளும தமிழில் இனிமை இல்லை. மேடு பள்ளம் நிறைந்த பாதையிலே ஓட்டை 'லாரி'ஓடுவது போனற ஓசையுடன் சொற்றொடர்கள் அமைந்திருக்கின்றன. ஆசிரியர் கோ. அருணாசலம். விலை ரூ. 1. இதுவும சக்தி வெளியீடே.

கோதாவரி

நல்ல கவிஞர்கள் இத்தகைய கவிதைப் புத்தகங்களைக் காணும்போது, கவிதையுலகத்திற்கேற்பட்ட கறையென்று கருத நேரிடுகிறது. பெரும்பாலும் புராணககருத்துக்களைக் கூறும் இக்கவிதைத் தொகுதியில் கவிதையிலும் சுவையில்லை என்று காணுமபோது கற்பனையில் மகிழும மனத்திற்கும், கருத்தில் மகிழும் அறிவிற்கும் பயனற்ற புத்தகம் இது என்ற முடிவுதான ஏற்படுகிறது. ஆசிரியர் 'லக்ஷ்மி' விலை 6 அணா. இதுவும் சக்திவெளியீடே.

வ. ரா. மணி மலர்

பெயர் பெற்ற எழுத்தாளர்களில் ஒருவரான வ. ரா. அவர்களின் அறுபதாண்டுவிழாவை யொட்டி, வெளியிடப்பட்டிருக்கும மலர். வ. ரா. வைப்புகழ்கின்ற கட்டுரைகளின தொகுப்பு. டி. எஸ். சொக்கலிங்கம் அவர்களின் கட்டுரை இத் தொகுபபில் சிறந்து விளங்குகிறது. கவிதைமாதிரி அச்சுக் கோர்த்துள்ள சில பக்கங்களில் உள்ள கட்டுரைகள் மலரின் சிறப்பைக்குறைக்கின்றன. வ. ரா. வைபபற்றி அறிஞர் அண்ணா எழுதிய கட்டுரை இத் தொகுபபில் இல்லாமை பெருங் குறையாகும். விலை ரூ. 1—8—0. இதுவும சக்தி காரியாலயத்தில் கிடைக்கும.

பொம்மைக் கடிகாரம்!

இந் நாடகத்தை ஒரு இளம் எழுத்தாளரின் கனவுக்கொப்பிட்டால், இதில் உள்ள உரையாடல்களை அவர் கனவில் பிதற்றுவதற்கொப்பாகக் கூறலாம் என்று தோன்றுகிறது. கற்பனை நிறைந்த பேச்சுக்கள் பொருளைப் புரியவொட்டாமல் அடிக்கின்றன. அட்டைப்படம் பெருங்காய 'லேபிள்'போல் இருக்கிறது. ஆசிரியர்: அரு. பாபநாசம். (அருவி). கன்னிப் பதிப்பகம், திருநெல்வேலி சந்திப்பு: விலை 12 அணா. ○

திட விரதம்



- சுலோசனா -

மோவாயில் கை வைத்துக் கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருந்தாள் மனோ. அவளைச் சுற்றிலும் அவளது துணி மணிகளும நோட் புத்தகங்களும் சிதறிக்கிடந்தன. டிரங்குப்பெட்டி திறந்திருந்தது. மனோன்மணி பி. ஏ. சென்னையில் ஒரு கான்வென்ட் பள்ளியில் ஆசிரியை வேலை பார்த்து வந்தாள். அவளுக்கு வயது சுமார் முப்பது இருக்கும். இன்னும் மணமாகாத மங்கையாகவே யிருந்தாள். அவளது சொந்த ஊர் திருச்சி. கிழத் தந்தையைத் தவிர வேறு யாருமில்லை அவளுக்கு.

மனோ தனது ஹைஸ்கூல் படிப்பை முடித்துக்கொண்டதும் தந்தை கேசவராஜு மகளுக்காக மாப்பிள்ளை தேட ஆரம்பித்து விட்டார். அவர் ஏழை. எவ்வளவோ முயன்றும் மனோவிற்கு ஒரு மாப்பிள்ளையும் அமையவில்லை. அவளை மணம் செய்து கொள்ள எவனும் இசையவில்லை. காரணம் அவள் 'கறுப்பி.' அதோடு 'அழகு' என்ற அம்சமே அவளிடம் இல்லை! ஏகப்பட்ட சொத்துக்கள் இருந்திருந்தால் ஒருவேளை அதற்காசைப்பட்டேனும் அவளை யாராவது மணந்து கொண்டிருப்பார்கள். ஆனால் அதுவும் அங்கே இல்லை!

கேசவராஜு உள்ளம் உடைந்து போனார். பெற்ற மனமல்லவா? தன் பெண் 'அவலட்சணம்' என்று எல்லோராலும் ஒதுக்கப்பட்டுள்ள உண்மை அவருக்குத் தெரிந்தது-அது அவரைச் சித்திரவதை செய்தது.

மனோவிற்கும் உண்மை தெரியாமலில்லை. "தான் ஒரு கறுப்பி; அவலட்சண பிண்டம்" என்று தனக்குள்ளேயே கூறிக் கொண்டாள். மற்றப் பெண்களுக்குக் கிட்டும் மணவாழ்க்கை இன்பம் தனக்குக் கிடைக்காது என்று தெரிந்துவிட்டது அவளுக்கு. அதை எண்ணி யெண்ணி அவள் எவ்வளவோ கண்ணீர் சிந்தினதுண்டு. மகளின் இளமைப்பருவம் வீணாகக் கழிவதைக் கண்ட தந்தை மனமுடைந்து அழுதார்; தந்தை அழுவதைக் கண்டு மகள் அழுதாள்; பிறகு இருவரும் ஒருவரையொருவர் தேற்றிக் கொண்டனர்.

மனோ அடக்கும் சக்தி வாய்ந்தவள்; தைரியசாலி. கேசவராஜுக்கோ தன்காலத்தற்குப்

பின்னர் தன் மகளின் கதி என்னாகும் என்று ஓரே கவலே. மனே தந்தையைத் தேற்றித் தன்னே மேலே படிக்கவைக்கும்படி வற்புறுத்தினள். கேசவ ராஜு நெற்றிவியர்வை நிலத்தில் விழப்பாடுபட்டு உழைத்து அவள் விரும்பியபடியே படிக்க வைத்தார். திருச்சி 'ஹோலி கிராஸில்' பி. ஏ. படிப்பை முடித்தாள் மனே. இனி மணமே செய்து கொள்வதில்லே யென்று திடவிரதம் கொண்டாள். ஆண்மக்களின் மீது அவளுக்கு வெறுப்பு வெறுப்பாக வந்தது!

2

கேசவராஜுவின் வீடு காவேரிக் கரையோரமாக அமைந்திருந்தது. அடிக்கடி கல்லூரியிலிருந்து வந்ததும் தந்தையோடு காவேரிக்கரையில் அழகிய தோப்புக்களிடையே உலாவுவாள் மனே. வயது முதிர்ச்சியடைந்து வரும் தந்தைக்குத் தேறுதல் கூறி உற்சாகப்படுத்துவாள். பி. ஏ. படிப்பு முடிந்ததும் மனேவிற்குச் சென்னேயில் வேலே கிடைத்தது. அப்பாவையும் கூட்டிக் கொண்டு சென்னேக்குக்கிளம்பி விட்டாள். விடுமுறைகளில் திருச்சிக்கு இருவருமாக வருவார்கள். காவேரியின் அழகைப் பருகுவார்கள். மகளின் நிம்மதியான வாழ்வைக்கண்டு தந்தை எவ்வளவோ தேறி வந்தார். இப்படியாக மனேவின் வயது



ஏறிக்கொண்டே சென்று முப்பதில் வந்து நின்றது!

அன்று மனோ கவலைப்பட்டதற்குக் காரணமுண்டு. முப்பது வயதாகியும் தான் மணமாகாதிருப்பதனால் மற்ற ஆசிரியைகள் தன்னைப்பற்றிப் பலவாறு பேசிக்கொள்வது அவள் காதில் எட்டியது. தனது மாசற்ற பெயருக்குத் தீங்கு விளைந்து வருவது அவளுக்குப் பெரும் மனக்கவலையை உண்டு பண்ணியது. இது நாள்வரை ஒரு ஆண்மகனோடும் அவள் முகம் கொடுத்துப் பேசியதில்லையே! ஆண்வர்க்கத்தினர் தான் அவளைக் 'குரூபி' என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்களே! ஆசிரியைகளிடம் அவளுக்குக் கோபம் வரவில்லை. ஆண் வர்க்கத்தாரிடம் தான் கோபம் வந்தது!

பல்லைக் கடித்துக்கொண்டே தன் சாமான்களை ஒழுங்குபடுத்தி வைத்தாள். கிறிஸ்துமஸ் விடுமுறை ஆரம்பித்து விட்டதால் தந்தையோடு திருச்சிக்குப் போக அவள் ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள்.

3

காவேரியில் புது வெள்ளம் நுங்கும் நுரையுமாக அழகாக ஓடிக்கொண்டிருந்தது. தோப்புக்களும் சோலைகளும் பச்சைப் பசேலென்று கண்களுக்குக் குளிர்ச்சியை அள்ளிக்கொடுத்துக் கொண்டிருந்தன. மனோ கையில் ஒரு புத்தகத்துடன் தனிமையாக நடந்து கொண்டிருந்தாள். கேசவராஜுவுக்கு உடம்பு நலமற்றிருந்ததால் அவள் அன்று தனிமையாக உலாவினாள்.

திருமண நிகழ்ச்சிகள்

திண்டுக்கல் தோழர் எம். பிச்சை — பி. சாத்தாய் திருமணம் 'பொன்னி' ஆசிரியர் முருகுசுப்பிரமணியன் தலைமையில் 12-6-49 அன்று நாகில்நகர் என். எஸ். என். சுப்பையர் அவர்கள் சத்திரத்தில் நிகழ்ந்தது; தோழர் டி. கே. சீனிவாசன் முதலியோர் மணமக்களை வாழ்த்திச் சொற்பொழிவாற்றினர்.

O

புதுக்கோட்டைத் தோழர் ஆர். கன்னையா — முத்துலட்சுமி திருமணம் தேனிபட்டி — புதுப்பட்டியில் 20-6-49 அன்று திருந்திய முறையில் நிகழ்ந்தது. 'பொன்னி' ஆசிரியர் முருகு சுப்பிரமணியம் தலைமை தாங்க, தோழர்கள் நா. முத்து, நாரா நாச்சியப்பன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திச் சொற்பொழிவாற்றினர்.

அவளது உள்ளத்தில் தனது இளம்பிராயத்தின் நினைவுகள் பயங்கரமாக வந்து மோதிக் கொண்டிருந்தன. "பெண்கள் கொடி போன்றவர்கள்; ஒரு கொழுகொம்பைத் தாவிப்பிடித்துக்கொள்ளாவிட்டால் விழுந்து விடுவார்கள்" என்று எழுத்தாளர்கள் புளுகுவதுண்டு. மனோவைப் பாருங்கள்! கொழுகொம்புகள் அவளை நெருங்க மறுத்துவிட்டன. அவள் பெண் - கொடிதானே? பின் ஏன் விழவில்லை? கொழுகொம்புகளை அவள் பரிகசித்தாள்! கொழுகொம்புகளில்லாது தனக்கு வாழ முடியுமென்று அவள் மார்தட்டிப் பறைசாற்றினாள்!

திடீரென்று காற்றோடு கலந்து வந்த ஒரு குரல் மனோவின் சிந்தனையைக் கலைத்தது. மனோ நின்று உற்றுக் கேட்டாள். குரல் ஏதோ ஒரு குழந்தையின் அழுகைக் குரல்போல் தோன்றியது. மனோ குரல் வந்த திக்கை நோக்கி விரைந்தாள்.

ஒரு மாமரத்தடியில் சுமார் பத்து வயதுச் சிறுவனொருவன் வீழ்ந்து கிடந்தான். விம்மி விம்மிக் காலைப்பிடித்தபடியே அழுது கொண்டிருந்தான். காலிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது. மனோ புத்தகத்தைக் கீழே போட்டுவிட்டுத் திடுக்கிட்டவளாய் அவனிடம் விரைந்தாள். குப்புறக்கவிழ்ந்திருந்த அவனது முகத்தை நிமிர்த்தினாள். அச்சிறுவன் தனது பெரிய கண்களைத் திறந்து அவளை வியப்புடன் நோக்கினான். பையன் பார்வைக்கு மிகவும் அழகாயிருந்தான்.

"இதெப்படி நேர்ந்தது?" என்று அன்போடு கேட்டாள் மனோ. பையன் கண்களைத் துடைத்துக் கொண்டே, "அப்பா ஆற்றிலே போய் விளையாடக் கூடாதுன்னார். நான் கேட்காமல் வந்தேன்! அதோ-அந்தக் கல்லில் கால் தடுக்கிடுத்து. ஐயோ, ரத்தமாகக் கொட்டுதே! வலிக்குது மாமி! நடக்க முடியல்லே!" என்று விம்மினான். "இவ்வளவு தானா? போதும், அழாதே. நான் சரிப்படுத்திவிடுகிறேன்!" என்று புன்னகையுடன் மொழிந்த மனோ, காயத்தைத் தண்ணீரினால் கழுவிவிட்டுத் தனது கைக்குட்டையால் கட்டி

அறிவிப்பு

இதுவரை மதுரையில் விளம்பரம் சேகரிப்பதற்கு எங்கள் பிரதிநிதியாக இருந்துவந்த **P. துரைராஜ்** என்பவர் விலக்கப்பட்டுவிட்டபடியால், வணிகர்களும் பொதுமக்களும் அவருடன் பொன்னி சம்பந்தமாக எவ்வித தொடர்பும் வைத்துக்கொள்ள வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பொறுப்பாளர்,
பொன்னி அலுவலகம்,
புதுக்கோட்டை *17-6-49*

விட்டாள். அச்சிறுவன் அவள் செயலை வியப்புடன் நோக்கிக் கொண்டே, "எவ்வளவு நன்றாகக் கட்டுகிறீர்கள் மாமி! நீங்க யார்? டாக்டரம்மாவா? நல்ல மாமி!" என்றான்.

"நான் டாக்டரில்லையப்பா. டீச்சர்... அதிருக்கட்டும், உன் பெயரென்ன? வீடு எங்கே இருக்கிறது? தனிமையாகவா வந்தாய்?" என்று கேள்விகளை அடுக்கினாள் மனோ.

"என் பேர் ராமு. எங்க வீடு அதோ அந்தத் தோப்புக்கு அந்தப் பக்கம் இருக்குது. அப்பா பொன்மலையிலே வேலை பார்க்கிறார். பாவம்! வேலைக்குப் போகுமுன்னே அப்பாதான் சமைச்சு வைச்சுட்டுப் போவார் ...வரும்வரை நான் தனியா வீட்டிலே இருப்பேன் ... எங்க அப்பாவுக்கு என் மேலே ரொம்பப் பிரியம்!"

"ஏன் உங்கப்பா சமைக்கணும்? உங்கம்மா சமைக்க மாட்டாளா?"

"ஊஹூம் ......அம்மா இல்லேன்னு! போன வருஷம் செத்துப் போய்ட்டாளே! ... மாமி! உங்களைப் பார்த்தால் எங்கம்மாவாட்டமிருக்கு! வீட்டுக்கு வாங்கோ!"

"வீட்டிற்கு வரவா—ஏன்?"

"எங்கப்பா இன்னிக்கு நேரம் சென்றுதான் வருவார். பாவம், களைக்கக் களைக்க வந்து அவர் காப்பி போடறதைப் பார்த்தா அழுகையா வரும்...! ஏன்மாமி! உங்களுக்குக் காப்பி போடத் தெரியுமல்லவா?"

"ஆமாண்டா கண்ணே—அதனாலே!"

"உம் ... மாமி ... வீட்டுக்கு வாங்கோ!"

குழந்தை கெஞ்சினான். மனோவின இதயம் அவளையறியாமலேயே அக்குழந்தையிடம் சென்றுவிட்டது. அவனது கொஞ்சல்மொழிகளும், திறந்து பேசும் சுபாவமும், அழகிய தோற்றமும் அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.

(அடுத்த இதழில் முடியும்)

மாணவர் மன்றம்

கேள்வி 8 விடைகள்

ம. அ. கிருஷ்ணராஜு
I. U. C.
அரசியலார் கல்லூரி
கோயமுத்தூர்
(பரிசுபெற்றவர்)

செழித்து வளரும் பயிருக்குக் கேடு நேராதபடி முள்வேலி சுற்றிலும் அமைப்பதைப்போல மாடிப்படிக்கட்டுகளை ஏறுபவர்கள் சறுக்கியோ, கால் தடுக்கியோ கீழே விழாவண்ணம் படிக்கட்டுகளின் இருபுறமும் பிடித்துக் கொண்டு நடக்க வசதிகளையுண்டாக்குவதுபோல அறிவாகிய மாடியின் உச்சியை அடையப் படிப்பாகிய படிக்கட்டுகளை ஏறும் மாணவர்கள் நிலை பிறழாதிருக்க, அனுபவ அறிவாகிய அரண் தேவைப் படுகிறது. அத்தகைய அறிவைப்பெற மாணவர்களுக்கு 'ஊர்ச்செலவு செல்லல்' உதவுகின்றது. இதனால் மாணவர்கள் தாங்கள் படித்த பலவற்றை நேரில்கண்டு, அவற்றின் உண்மைக் கலையையும், உட்பொருளையும் உணரலாம். அதோடு இயற்கையெழிலை அள்ளிப்பருகும் வாய்ப்பும் கிட்டுகிறது. இதனால் மனமகிழ்வும், மகிழ்வால் உடல்வலிவும் பெறுகின்றனர்.

அ. ரங்கதாஸ்
5—ம் படிவம்
மைக்கேல் உயர்நிலைப்பள்ளி
கோயமுத்தூர்

அறிவின் வளர்ச்சியில் விருப்பமுடைய மாணவர்கள் சுற்றுச் செலவு செல்வது மிகவும் அவசியம். எத்தனை நூல்களைக் கற்றுத் தேர்ந்தாலும் பல ஊர்களைச் சுற்றிப் பார்க்கின்றவர்களுக்கே அறிவு நிரம்பி, அடக்கம், பிறர்க்கு உதவி புரிதல் முதலான சிறந்த பண்புகள் உண்டாகும். செலவு செய்து வெவ்வேறிடங்களை அடைந்தால், ஆங்காங்குள்ள நிலவளம், மக்களியல்பு, இயற்கையின் அழகு, மக்களின் நாகரிகம், மொழி, நடையுடை பாவனை முதலியவற்றை அறியலாம். அதனால நமது அறிவைப் பெருக்கிக் கொள்ள இடமுண்டு. நம்நாட்டில் தமிழரைப் பற்றித் தெலுங்கரும், தெலுங்கரைப்பற்றித் தமிழரும் தாழ்வான எண்ணங் கொண்டு தூற்றும் கேடு ஒழியும். மக்களிடையே பிறரைப்பற்றிய தப்பு எண்ணங்கள் ஏற்படாது. சுற்றுச்செலவு செய்ததாலல்லவா 'கொலம்பஸ்' அமெரிக்காவைக் கண்டு பிடித்தார்!

மு. நடராசன்
4—ம் படிவம்
சேதுபதி உயர்நிலைப்பள்ளி
மதுரை

மாணவர்களின் கல்வி அறிவு முதிர்வதாகும். தான் செல்லும் ஊரில் வழங்கும் மொழியில் பயில ஏதுவாகிறது. தான் செல்லும் ஊரிலுள்ள தக்காரது அறிமுகமும், அங்குள்ள பெரியோரது பழக்கமும் ஏற்பட வகையுண்டு; அங்குள்ளாருக்கு அறிமுகக் கடிதம் கொண்டுபோவதால் ஊர்ச்செலவு சென்று மீண்டவன் தன் நாட்டையடைந்ததும், தனக்கு அறிமுகமான பிறநாட்டு அறிஞருள் தக்

காரோடு முடங்கல் மாற்றிக்கொள்வதால் அறிவு முதிர்ச்சிக்குப் பெரும் பயனுகும். ஊர்ச்செலவில் வழக்கறி மன்றங்கள், துறைமுகங்கள், வாணிக நாவலர்கள், போர் நாவாய்கள், கருவூலங்கள், பரிப்பயிற்சிக் கூடங்கள், இன்பச்சோலைகள், கல்லூரிகள், முதலியன பிறவும் காண்டற் குரியன. ஊர்ச்செலவின் பயனுகத் தன் தாய்நாட்டுக் குணங்களோடு, பிறநாட்டாரது குணச் சிறப்புக்களையும் ஏற்றுக்கொள்ள வசதி உணடு.

பு. பாரத் செயபால்

6—ம் படிவம்

ஒற்றுமை உயர்நிலைப்பள்ளி
கோயமுத்தூர்

மாணவர்கள் ஊர்ச்செலவு செல்லுவதால், பள்ளியில் அவர்கள் பயின்ற பலவற்றை நேரில் பார்த்து அறிந்து, மனதில் பசுமரத்திலடித்த ஆணி, போன்று பதிய வைத்துக்கொள்ள ஏதுவாகிறது. உதாரணமாகப் பள்ளியில், 'சிமெண்ட்' செய்யும் முறையைப் பற்றியும்—மின்சாரம் சேகரிக்கும் முறையைப் பற்றியும் — தட்ப, வெப்ப நிலைகளைப்பற்றியும், மாணவர் படித்திருப்பர்; ஆனல் நேரில் அனைவரும், அனைத்தையும் கண்டிரார்—கண்டிருக்க இயலாது. அத்தகைய மாணவர்கள் ஊர்ச்செலவு செல்லுவதால், தம் ஊரில் இல்லாதவற்றை— இருப்பினும், அதைவிட மாறுபட்டதை—பள்ளியில் பயின்றவைகளில் சிலவற்றை —பள்ளியிலுங்கூடப் பயிலாதவைகளில் சிலவற்றை, நேரில் கண்டு உணரமுடிகிறது. மேலும், ஊர்ச்செலவின் மூலம் மாணவர்கள்— இயற்கையின் எழிலையும்— பிற ஊரிலுள்ள மக்களின் நடை, உடை, செயல்முறை ஆகியவற்றையும்—காணவும், அறியவும் சமயம் வாய்ப்பதோடு— அவ்வூரிலுள்ளோரில் ஒருசிலரின் நட்பையும பெற நேரிடுகிறது. பொதுவாக, ஊர்ச்செலவு செல்லுவதன்மூலம் மாணவர்கள், "உலக அறிவு" பெறுகின்றனர்.

உ. ஜெகநாதன்

5—ம் படிவம்

போர்டு உயர்நிலைப்பள்ளி,
லால்குடி.

பள்ளியறிவோடு நில்லாது, அறிஞர்களின் ஆய்வுரைகளைக் கேட்பதிலும், செய்தித் தாள்களின் மூலமாகவும், பொது அறிவு பெற்ற மாணவர்கள் ஊர்ச்செலவு செல்வதால், ஆங்காங்குள்ள இயற்கை யமைப்பு, இயற்கை வளம், தட்ப வெப்பநிலை, ஆகிய இவைகளுக் கிடையேயுள்ள ஒற்றுமை, வேற்றுமைகள், அவைகளுக்குரிய காரணங்கள் முதலானவற்றையும், ஆங்காங்கு காணப்படும் பழங்காலச் சின்னங்களைக் கொண்டு அவைகளின் சரிதப் பெருமை, முன்னோர் பெருமை, முன்னுள் நிலைமை, இன்றுள்ள நிலைமை, அவற்றிற்குரிய காரணங்கள், மக்களின் மனேநிலை, ஆகிய இவைபோன்ற பற்பல விஷயங்களைப்பற்றி ஆராய்வதால், ஆராய்ச்சி யறிவும், அறிவு விசாலமும் பெறுவர். அதேனுன்று அவ்வந்நாட்டு மக்களையும், இவர்களோடு ஒப்பிட்டுப்பார்த்து, ஒவ்வொருவரும், ஒவ்வொருவரிடமிருந்து கொள்ளவேண்டிய கருத்துக்கள், ஆகிய இவை போன்றவற்றையும் அறியவாய்ப்புக் கிடைக்கும். மாணவர்கள் இது போன்ற கருத்துக்களையும் இன்னும் மற்ற பொருள்களைப் பற்றியும், தாங்கொண்ட கருத்துக்களை, பொதுக்கூட்டங்களின் வாயிலாக அங்குள்ள மக்களுக்கு காலத்துக்கேற்ற கருத்துக்களையும், கொண்டுள்ள கருத்துக்களில் ஏற்படவேண்டிய மாறுபாடுகளையும, "எண் பொருள் ஆகச் செலச் சொல்லித் தாம்பிறர்வாய் நுண்பொருள் காண்பதறிவு" என்ற தமிழ் மறைக்கேற்ப எடுத்துச் சொல்வதால், மக்கள் விளக்கம் பெற்று உண்மை யுணர்வர். மாணவர்கள் இவற்றைச் சொல்வதால், பேச்சுத்திறனும், மேலும் மேலும் அறிவும், சிந்தனையும் எய்தப்பெறுவர்.

PRINTED BY AR. PERIYANNAN AT THE SENTHAMIZH PATHIPPAKAM
EAST MAIN STREET, PUDUKKOTTAI.
EDITOR & PUBLISHER: MURUGU SUBRAMANIAN